மலர்-5 இதழ்-116 ஜூன் 16-30 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**




மாதமிருமுறை

## மூன்றுமுறை உருமாறிய திருவள்ளுவர்

www.aanmeegamalar.com
e-magazine
e-magazine

# பக்தைக்காக வழக்கறிஞராக மாறி வாதாடிய சிவபெருமான்

# பெயரை மறந்த அனுமன்




ராமாயணத்தை எழுதி முடித்த வால்மீகி முனிவர் ஒவ்வொரு காண்டத்திற்கும் ஒவ்வொரு பெயர் சூட்டினார்.

சுந்தர காண்டத்திற்கு ஆஞ்சநேயர் பெயரை சூட்டினார். ஆனால் ஆஞ்சநேயர் தன் பெயரை சூட்ட வேண்டாம் என்று உறுதியாக சொல்லிவிட்டார்.

வால்மீகி முனிவர் ஆஞ்சநேயரை போன்று சமயோசித புத்தி கூர் மையால் சரி வாயு புத்ரா சுந்தர காண்டம் என்று பெயர் சூட்டினார். ஆஞ்சநேயர் ஆஹா அருமை என்று பாராட்டி இது நம் பெயர் இல்லையே என்று சென்று விட்டார்.

வெகு காலம் ஆனதால் ஹனுமனுக்கு தன் அன்னையை பார்க்க ஆசை வரவே அஞ்சனா தேவியை காண அங்கு சென்றார்.

தன் மகன் ஹனுமனின் வரவால் மகிழ்ச்சி அடைந்த அஞ்சனை வா சுந்தரா வா என்று அழைத்தாள்.

ஹனுமானுக்கு தூக்கி வாரி போட்டது. தாயே தாங்கள் என்ன கூறினீர்கள் என்று.

அதற்கு சுந்தரா அதுதானே உன் பால்ய பருவ பெயர் நீ தான் மறந்து விட்டாய் ஹனுமா !! சரி நான் உனக்கு பலகாரம் செய்ய செல்கிறேன் என்று சொல்லி உள்ளே சென்று விட்டார்.

அப்போது தான் ஹனுமானுக்கு புரிந்தது. தன் பெயரை வால்மீகி எனக்கே தெரியாமல் வைத்துவிட்டாரே என்று!!

# ஏழு பிறவிக்கான லிங்கம்

உலகின் சிறந்த வழிபாடு சிவலிங்க வழி பாடாகும். எப்படிப்பட்ட வழிபாடக இருந்தாலும் அதை ஏற்கும் ஒரே கடவுள் சிவபெருமான் மட்டுமே.

சாஸ்திர, சம்பிரதாயப்படி செய்தாலும்,எந்த சாஸ்திரத்தையும் கடை பிடிக்காமல், அன்பால் வழிபாடு செய்தாலும் ஏற்கும் ஒரே தெய்வம் சிவன்.




இந்த வகையில் ஏழேழு பிறவிகளுக்கும் நற்பலங்கள் கிடைக்க ஏழு வகையான சிவலிங்கங்கள் இருக்கின்றன. அவற்றை முறைப்படி நாம் வழிபட்டு வந்தால் எண்ணற்ற நன்மைகள் இல்லம் தேடி வந்து சேரும்.

- சுயம்புருவ லிங்கம் தானாக உண்டானது.
- தேவியகம் லிங்கம் அம்பிகை வழிபட்ட லிங்கம்.
- தைவிகம் லிங்கம் தேவர்கள் வழிபட்டது.
- மானுஷம் லிங்கம் மனிதர்கள் வழி பட்டது.
- ராட்ஸச லிங்கம் அசுரர்கள் வழி பட்டது.
- ஆரிஷம் லிங்கம் ரிஷிகள் வழிபட்டது
- பாணலிங்கம் பாணாசுரன் வழிபட்டது.




# தீய சக்திகளிடமிருந்து வீட்டை பாதுகாக்கும்

# தர்பைப்புல்

இந்த ஒரு புல்லை வாசலில் கட்டி தொங்க விட்டால் எந்த ஒரு துஷ்ட சக்தியும் உங்களை நெருங்கக்கூட முடியாது

நம்மையும் நம் வீட்டை சுற்றியும் நல்ல அதிர்வு அலைகள் மற்றும் கெட்ட அதிர்வலைகள் இரண்டுமே இருக்கும். நல்லது என்று ஒன்று இருக்கும் பொழுது, கெட்டது என்ற ஒன்று இருக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. இந்த கெட்ட அதிர்வலைகளை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தி தர்ப்பை புல் ஒன்றிற்கு மட்டுமே உண்டு.

அனைத்து விதமான ஆன்மீக பரிகாரங்கள் செய்வதற்கும் இந்த புல் வகையானது பயன்படுத்தப்படுகிறது. இதற்கு 'தர்பை' என்கிற பெயருண்டு. இந்த தர்ப்பைப் புல் மிகவும் மகத்துவமான சக்திகளை தன்னுள்ளே கொண்டுள்ளது. சுப காரியங்கள் செய்வதற்கும், பூஜை, புனஸ்காரங்கள் செய்வதற்கும், பித்ரு பரிகாரங்கள் செய்வதற்கும் கூட தர்பைப் புல்லானது பயன்படுத்தப்படுகிறது.

தர்பை புல் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரின் அம்சமாக பார்க்கப்படுகின்றது. இதனை நம் வீட்டில் வைத்திருந்தால் வீட்டிலிருக்கும் எந்த ஒரு துஷ்ட சக்தியும் நம்மை அண்டுவதில்லை. தீய சக்திகள் தலை தெறிக்க வெளியே ஓடியே சென்று விடுமாம். இத்தகைய பேராற்றல் கொண்ட தர்ப்பைப்புல் விலையிலும் மலிவானது தான். அனைத்து பூஜை பொருட்கள் விற்கும் கடைகளிலும் கிடைக்கப் பெறுகின்றது மற்றும் நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

இதனை 108 என்ற எண்ணிக்கையில் சரிசமமான அளவில் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். ஒன்றாக கோர்த்து 8 இடங்களில் முடிச்சுகள் போட வேண்டும். தர்ப்பைப் புல்லை அடி மற்றும் நுனி பகுதிகள் இருக்குமாறு பார்த்து வங்க வேண்டும். ஒன்றாக சேர்த்து எட்டு இடங்களில் 8 முடிச்சுகள் போட்டு அதனை வீட்டின் தலை வாசல் பகுதிக்கு வெளியே மேல் பக்கமாக கட்டி விட வேண்டும். தர்ப்பைப்புல்லின் அடி பாகம் தெற்கு நோக்கியும், நுனிப்பாகம் வடக்கு திசையை நோக்கியும் வைப்பது அவசியமாகும். கெட்ட அதிர்வலைகளை நீக்குவதற்கு வாஸ்து சாஸ்திரம் கூறும் மிகச் சிறந்த பரிகாரமாக இந்த பரிகாரம் பார்க்கப்படுகின்றது. தர்ப்பைப் புல்லை கட்டி தொங்க விடும் பொழுது அந்த இடத்தில் துஷ்ட சக்திகள் எதுவும் பக்கத்தில் கூட வரமுடியாது. தர்ப்பையில் வீற்றிருக்கும் மும்மூர்த்திகளும் உங்களின் வீட்டிற்கு காவல்




தெய்வமாக இருந்து பாதுகாப்பு அளிப்பார்கள்.

பித்ரு பரிகாரங்கள் செய்வதற்கு மோதிர விரலில் தர்ப்பைப் புல்லை அணிவது வழக்கம். மற்ற சுப காரியங்களிலும் மோதிர விரலில் தர்பை புல் அணிந்து கொள்வது இறை ஆற்றலை பெறுவதற்கு தான். மோதிர விரல் வழியாக சக்திகள் ஊடுருவி வலது மூளைக்கு சென்று தூண்டிவிடப்பட்டு நம்முடைய எண்ண ஓட்டத்தை தெளிவடைய செய்யும். அறிவியல் ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் மகத்துவம் வாய்ந்த தர்ப்பை புல்லை எல்லோருடைய வீட்டிலும் பூஜை அறையில் தாராளமாக வைத்துக் கொள்ளலாம். இதனால் இறைவனுடைய பரிபூரண அருள் நமக்கு நேரடியாக கிடைக்கும். வேண்டியவேண்டுதல்கள் அனைத்தும் தடை இல்லாமல் பலிக்கும்.

தர்ப்பைப் புல்லை மருத்துவ ரீதியாகவும் நிறைய பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. சிறுநீரக கல், கல்லீரல் பிரச்சனை, உடல் உஷ்ணம் ஆகியவற்றை தவிர்ப்பதற்கும் சர்க்கரை நோயை கட்டுக்குள் வைப்பதற்கும் தர்ப்பைப் புல்லை தண்ணீரில் காய்ச்சி வடிகட்டி பருகலாம். தர்ப்பைப் புல்லால் செய்யப்பட்ட பாய், தலையணை, தியான விரிப்புகள் ஆகியவற்றை நம் வீட்டில் வைத்திருப்பது மிகவும் நன்மை தரும்.

தியானம் செய்பவர்கள் தர்ப்பைப்புல் கொண்ட விரிப்புகளில் உட்கார்ந்து தியானம் செய்யும் பொழுது விரைவாகவே தியான நிலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். உடலில் இருக்கும் பல்வேறு நோய்கள் தீர தர்பை புல் பாய் விரித்து கொண்டு தினமும் இரவு தூங்கி பாருங்கள். இது போல பழைய பழக்க வழக்கங்களை நாம் மறக்காமல் கடைபிடித்து வந்தாலே நம்முடைய வாழ்வும் சிறப்படையும்.

# 1,482 வியாதிகளை உருவாக்கும் வாதம் பித்தம் கபம்

மனிதனின் உடலுக்கு வாதம் பித்தம் கபம் இந்த மூன்று நிலைகளும் மிகவும் முக்கியமானது.

இந்த மூன்றும் சமமாக இருந்தால் மட்டுமே நம் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

வாதம் என்பது நம் உடம்பில் உள்ள ஒரு வாயு. இது நம் உடல் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது.

பித்தம் என்பது நம் உடலின் வெப்பநிலையை தருகின்றது.

கபம் என்பது நம் உடலுக்கான குளிர்ச்சியைத் தருகின்றது.

இந்த மூன்றும் நம் உடம்பில் அதிகரித்தாலும், குறைந்தாலும் நம் ஆரோக் கியம் பாதிப்படைகிறது.

வாதம் கூடினாலும், பித்தம் கூடினாலும், கபம் கூடினாலும் நம் உடலில் 1,482 வியாதிகள் வந்துவிடும். இந்த வாதம் பித்தம் கபம் சம நிலை படுத்த அவசியம் முயற்சிக்க வேண்டும்.



# சீதம்ம மாயம்ம...

## தியாகராஜர் கீர்த்தனை உருவான வரலாறு




தியாகராஜர் தனது வீட்டு திண்ணையில் அமர்ந்து ராம ஜபம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு வயதான தம்பதிகள் மற்றும் அவருடன் ஒரு உதவியாளர் உட்பட மூவர் வந்து அவரிடம் பேச ஆரம்பித்தார்கள்.

நாங்கள் வடக்கே ரொம்ப தூரத்திலிருந்து கால்நடையாய் கோவில்களை தரிசனம் செய்து கொண்டு வருகிறோம். அடுத்து ராமேஸ்வரம் செல்ல வேண்டும் இன்று இருட்டி விட்டது. இன்று ஒரு இரவு மட்டும் உங்களது வீட்டு திண்ணையில் தங்கிவிட்டு காலை பொழுது விடிந்ததும் சென்று விடுகிறோம். தயவு செய்து அனுமதி கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

தியாகராஜர் இரு கரங்களையும் கூப்பி அவர்களை வணங்கி வரவேற்றார். இன்று இரவு நீங்கள் இங்கேயே தங்கிக் கொள்ளலாம். இரவு உணவிற்கு ஏற்பாடு செய்கிறேன், இங்கேயே நீங்கள் திருப்தியாக சாப்பிடலாம் என்று சொல்லி அவர்களை அமர வைத்தார்.

தனது மனைவியை அழைத்து இவர்கள் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து விட்டு இவர்கள் சாப்பிடுவதற்குஇரவு உணவை ஏற்பாடு செய்து விடு என்றார்.

வீட்டில் இரண்டு பேர்களுக்கு போதுமான அரிசியே இல்லை. இப்போது ஐந்து பேர்களுக்கு உணவு தயாரிக்க வேண்டுமானால் அரிசிக்கு என்ன செய்வது என்று சிந்தித்தாள்.

பக்கத்து வீட்டுக்கு சென்று அரிசி வாங்கி வரலாம் என்று நினைத்தவள் வந்தவர்களுக்கு தெரியாதவாறு அரிசி வாங்கி வர பாத்திரத்தை எடுத்துயார் கண்ணிலும் படாமல் புடவையால் மறைத்தவாறு அங்கிருந்து வெளியே வந்தாள்.

இதனை கவனித்த முதியவர் அவளை தடுத்து நிறுத்தினார். அம்மா எங்களுக்காக நீங்கள் சிரமப்பட வேண்டாம். எங்களிடம் வேண்டிய அளவு தேனும் தினைமாவும் இருக்கிறது. இரண்டையும் பிசைந்து ரொட்டி தட்டி நாம் அனைவரும் சேர்ந்தே சாப்பிடலாம் என்றார்.

அவளின் மனதை படம் பிடித்து காட்டியது போன்று பேசியவரை வியப்புடனும் தர்மசங்கடத்துடனும் பார்த்தாள். தேனும் தினைமாவும் அடங்கிய ஒரு சிறிய பையை அவளிடம் கொடுத்தார் முதியவர். தயக்கத்துடனும் அதனை பெற்று கொண்டவள் ரொட்டியை செய்து முடித்தாள். அனைவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.


புனிதவேல்

தியாகராஜர் அவர்களுடன் விடிய விடிய பேசிக் கொண்டிருந்து விட்டு ஒரு கட்டத்தில் உறங்கி போனார். பொழுது விடிந்தது காலைக் கடன்களை முடித்து விட்டு கூடத்தில் அமர்ந்து வழக்கம் போல ராம நாமத்தை செபித்துக் கொண்டிருந்தார் தியாகராஜர்.

அவரின் எதிரே வந்த விருந்தினர்கள் மூவரும் நாங்கள் விடை பெறுகிறோம். இங்கே தங்க இடம் கொடுத்த உங்களுக்கு மிக்க நன்றி உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி என்று மூவரும் கிளம்பினார்கள். தியாகராஜர் அவர்களை வழியனுப்ப அவர்களுடன் வாசலுக்கு வந்தார்.

அவர்கள் மூவரும் வாசலை கடந்து தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் செல்வதை கண் இமைக்காமல் பார்த்தவாறு நின்றிருந்த தியாகராஜரின் கண்களில் சட்டென்று ஒரு தெய்வீக காட்சி தெரிந்தது.

இப்போது அந்த வயோதிகர் ஸ்ரீ ராமனாகவும் அந்த மூதாட்டி சீதையாகவும் அந்த உதவியாளர் அனுமனாகவும் தோற்றமளிக்க அவருக்குள் இனம் புரியாத ஒரு பதை பதைப்பு ஏற்பட்டது. கண்களில் நீர் சுரக்க தன்னை மறந்து பக்தி பரவசத்தில் ஆனந்த கூத்தாடினார் தியாகராஜர்.

ராமா என் தெய்வமே தசரதகுமாரா ஜானகி மணாளா நீயா என் இல்லத்துக்கு வந்தாய் என்னே நாங்கள் செய்த பாக்கியம் அடடா வெகு தூரத்திலிருந்து நடந்து வந்ததாய் என்று சொன்னாயே உன் காலை பிடித்து அமுக்கி உன் கால் வலியை போக்குவதை விட்டு உன்னை தூங்க விடாமல் விடிய விடிய பேசிக்கொண்டே இருந்தேனே.

மகாபாவி நான் என் வீட்டில் உண்ண உணவு கூட இல்லை என்று அறிந்து கொண்டு ஆகாரத்தை கொண்டு வந்து ஒரு தாய் தந்தையாய் இருந்து எங்கள் பசியையும் போக்கினாயே உனக்கு அநேக கோடி நமஸ்காரம் என்று நடு வீதி என்பதையும் மறந்து கண்ணீர் மல்க கதறி அழுதார் தியாகராஜர். அப்போது அவர் **சீதம்ம மாயம்ம** என்ற கீர்த்தனையை அவரையும் அறியாமல் பாட ஆரம்பித்தார்.

இசையுடன் கலந்த இன்ப வாழ்வில் இவர் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் காஞ்சீபுரத்தில் இருந்து இராமகிருஷ்ண யதீந்திரர் என்னும் மகான், இராம நாமத்தை 96 கோடி முறை செபிக்கும் படி தியாகராஜரிடம் கூறிச் சென்றார். இவர் அதனைத் தெய்வவாக்காக எடுத்து அப்புனிதச் செயலை 21 ஆண்டுகளிற் செய்து முடித்தார். சராசரியாக ஒரு நாளைக்கு 1,25,000 முறை இராமநாமத்தைச் செபித்து வந்தார். இதனால் பல தடவைகள் இராம தரிசனத்தைப் பெறும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.




இம் முக்கிய சந்தர்ப்பங்களில் **ஏலநீதயராது** (அடாணா இராகம்) **கழுகொண்டினி** (பிலகரி இராகம்) ஆகிய கீர்த்திகளை இயற்றினார்.

நாரத பகவான் ஒரு சந்நியாசி வேடத்தில்இவருக்குத் தரிசனமளித்து ஸ்வரார்ணம் என்ற சங்கீதக் கிரந்தத்தை கொடுத்து விட்டுப் போனார். தமக்குக் கிடைத்த அந்தக் கிரந்தத்தைஆதாரமாகக் கொண்டு தியாகராஜர் சங்கீத இலக்கணங்கள் அமைந்த பல கிருதிகளை இயற்றினார்.

இவர் பல தலங்களுக்கும் யாத்திரைகள் சென்று அங்கங்கே பல கீர்த்திகளை இயற்றி வந்தார். வழியில் ஒரு தடவை இவர் திருடர்களிடம் அகப்பட்டுக்கொள்ள நேரிட்ட போது, இராம லக்ஷ்மணர்களே சேவகர்கள் வடிவில் வந்து திருடர்களை விரட்டி விட்டார்கள். இது போன்ற பல அற்புத நிகழ்ச்சிகள் இவர் வாழ்வில் நிகழ்ந்துள்ளன.




1.ஜ்வாலா நரசிம்மர்




2.அகோபில நரசிம்மர்




3.க்ரோத (வராக) நரசிம்மர்




4.மாலோல நரசிம்மர்




5.கராஞ்ச (சாரங்க) நரசிம்மர்




6.பார்க்கவ நரசிம்மர்

# கருடன் வழிபட்ட ஒன்பது நரசிம்ம சன்னதிகள்

சிங்க முகமும், மனித உடலுமுள்ள நரசிம்மருக்குப் பொதுவாக இருப்பது ஒரு தலை, நான்கு கைகளே. இரண்யனுக்கு அஞ்சி வேறு பகுதிகளில் ஒளிந்து வாழ்ந்த முனிவர்கள், இரண்ய வதத்திற்குப்பின் பகவானிடம் நரசிம்மத் திருக்கோலத்தைத் தங்களுக்குக் காட்டியருள வேண்டும் என்று வேண்டினர். அதற்கிசைந்த பெருமாள் அவ்வண்ணமே முனிவர்களுக்குக் காட்சி தந்தார். அவ்வாறு காட்சி தந்த தலங்கள் தமிழகத்தில் எட்டு இடங்களில் உள்ளன.



7. யோகானந்த நரசிம்மர்



8. சத்ரவத நரசிம்மர்



9. பாவன நரசிம்மர்

இவற்றில் பூவரசன் குப்பம் நடுவில் இருக்க, இதைச் சுற்றி சோளிங்கர் நரசிம்மர், நாமக்கல் நரசிம்மர், அந்திலி நரசிம்மர், சிங்கப் பெருமாள் கோவில் (தென் அகோபிலம்), பரிக்கல் நரசிம்மர், சிங்கிரி கோவில் லட்சுமி நரசிம்மர், சித்தனைவாடி நரசிம்மர் ஆகிய தலங்கள் அமைந்துள்ளன.

மேலும் கருட பகவான் நேரில் தரிசித்த தலங்களாக ஒன்பது நரசிம்ம தலங்கள் போற்றப் படுகிறது. இந்த தலங்களில் உள்ள நரசிம்மரை தரிசித்தால், நரசிம்மருடன் கருடனுக்குரிய பலனையும் பெறலாம். அந்த நரசிம்ம தலங்களைப் பற்றி பார்ப்போம், மேலே 9 நரசிம்மர் மூலவர் படங்களும் கொடுத்துள்ளோம் தரிசித்து பலன் பெறாம்.

**1. ஜ்வாலா நரசிம்மர்:**

மேரு மலையில் வீற்றுள்ளார். இரண்யனை வதைத்தவர் இவரே. வதைத்த இடமும் இதுவென்கின்றனர். இந்த நரசிம்மரைத் தரிசிக்க மிகக் குறுகிய வழியில் செல்ல வேண்டும். எட்டு கைகளுடனும், நான்கு கைகளுடனும் இரண்டு நரசிம்மர் திருவடிவங்கள் உள்ளன.

**2. அகோபில நரசிம்மர்:**

உக்ரமூர்த்தியான இவர் மலைமீது எழுந்தருளி யுள்ளார். புராதனப் பெருமாள் இவரே.

**3. க்ரோத நரசிம்மர்:**

பாபநாசினி நதிக்கரையின் கிழக்கில் லட்சுமி நரசிம்மரும் வராக நரசிம்மரும் கோவில் கொண்டுள்ளனர். இரட்டை நரசிம்மர் தலம் எனும் பெயருடைய இவ்விடத்திலிருந்து பார்த்தால் வேதகிரி, கருடாத்ரி மலைகளுக்கிடையேயான பள்ளத் தாக்கு தெரியும். வராக குண்டத்திலிருந்து பாப நாசினி நதி ஓடி வருவதையும் காணலாம்.

**4. மாலோல நரசிம்மர்:**

"மா' என்றால் லட்சுமி. "லோலன்" என்றால் பிரியமுடையவன். நரசிம்மரின் உக்கிரத்தை லட்சுமி தணித்த படியால், லட்சுமிப்பிரியனான



பெருமாள் பிராட்டியை மடியில் அமர்த்தியபடி லட்சுமி நரசிம்மராகக் காட்சி கொடுக்கிறார். அகோபிலத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் கோவில் கொண்டுள்ளார்.

### 5. கராஞ்ச (சாரங்க) நரசிம்மர்:

மேல் அகோபிலத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளார். கராஞ்ச மரத்தடியில் கோவில் கொண்டு, கையில் வில்லேந்தியுள்ளதால் இப்பெயர் பெற்றார்.

### 6. பார்க்கவ நரசிம்மர்:

மலையடிவாரத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளார். ராமரால் வழிபடப்பட்டவர் இவர். (பார்க்கவன் என்பது ராமபிரானின் திருப்பெயர்களுள் ஒன்று.)

### 7. யோகானந்த நரசிம்மர்:

மலைமீது, தென்கிழக்கு திசையில் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளார். உக்கிரமாக அவதரித்த நரசிம்மர் இங்கே யோக நிலையில் அமர்ந்துள்ளார். பிரகலாதனுக்கு யோகம் கற்பித்த மூர்த்தி இவர். யோக கலையில் சாதிக்க இந்த நரசிம்மர் துணைபுரிவார்.

### 8. சத்ரவத நரசிம்மர்:

கீழ் அகோபிலத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளார். குடை வடிவில் அமைந்துள்ள கோவிலில் பத்மபீடத்தில் அமர்ந்த வண்ணம் காட்சி தருகிறார் நரசிம்மர். அரிய வகை கருங்கல்லாலான திருவடிவம்.

### 9. பாவன நரசிம்மர்:

பவனி நதிக்கரையில் கோவில் கொண்டதால் இப்பெயர் பெற்றார். அகோபிலத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இத்தலத்தில் வருடாந்திர உற்சவம் மிகச் சிறப்பாக நடக்கும்.

# உங்கள் கடவுளுக்கு இத்தனை பெயர்கள் ஏன்

ஏன் உங்களுக்கு மட்டும் சிவன், ராமன், கண்ணன், பார்வதி, சரஸ்வதி, லட்சுமி, காளி, முருகன், பிரம்மா என பல பெயர்கள் வைத்திருக்கிறீர்கள்.? எங்களை போல ஒரு கடவுள் என வைத்துக் கொள்ளாமல்,' என்று கவிஞர் கண்ணதாசனிடம், வெளிநாட்டினர் ஒருவர் கேட்டாராம்.

அதற்கு மிக பொறுமையாக அந்த மனிதரிடமே, 'உன் பெற்றோர்க்கு நீ யார்.?' எனக் கேட்டார்.

அதற்கு அவர், 'மகன்' என பதிலளித்தார்.

'உன் மனைவிக்கு.?' கேள்வி தொடர்ந்தது.

'கணவன்'.!

'உன் குழந்தைகளுக்கு.?'

'அப்பா, தந்தை.!'

உன் அண்ணனுக்கு.?'

'தம்பி.!'

'தம்பிக்கு.?'

'அண்ணன்.!'

'கொழுந்தியாளுக்கு.?'

'மச்சான்.!'

'அண்ணன் குழந்தைகளுக்கு.?'

'சித்தப்பா.!'

விடவில்லை, கேள்விகள் நீண்டு கொண்டே நீண்டு கொண்டே போனது. பெரியப்பா, மைத்துனர், மாமன், மச்சான்

என பல உறவுகளில் பதில் வந்து கொண்டே இருந்தது.

சில நிமிடங்கள் கண்ணதாசன் நிறுத்தினார்.

வெறும் மண்ணை தின்னப் போகும் சடலத்திற்கே இத்தனை பெயர் வைத்து அழைக்கும் போது, "யாதுமாகி நின்று, எங்கெங்கும் நின்று உலகையே கட்டிக் காக்கும் என் அப்பன் பரம்பொருளை எத்தனை பெயர்களால் அழைத்தால் என்ன..??

அவன் எதற்குள்ளும் அடங்காதவன், உன்னுள்ளும் இருப்பவன், என்னுள்ளும் இருப்பவன்." என முத்தாய்ப்பாக முடித்தார்.



# நிலையான ஆட்சி அமைய அருளும் அச்சிறுபாக்கம் சிவன்

ஈசனே எல்லா உயிர்களுக்கும் தலைவனாய் நின்று எல்லா செயல்பாட்டிற்கும் காரணமாகத் திகழ்ந்தாலும், மனிதன் எந்த ஒரு செயலைத் தொடங்கும் முன்பும் விநாயகப் பெருமானை துதிக்க வேண்டும் என்பது அந்த ஈசனது கட்டளை.

ஏனெனில் (விக்னம்) இடர்களை ஏற்படுத்துவதும், அந்த இடங்களை களைவதும் கணபதி தான். இதை மறந்த ஈசனுக்கே இடர் நேர்ந்தது ஒரு சமயம்.

தாரகாட்ஷன், கமலாட்சன், வித்யுன்மாலிஆகிய மூன்று அசுரர்களும் பிரம்மாவை நோக்கி கடுந் தவம் இயற்றி, பொன் வெள்ளி மற்றும் இரும்பால் செய்யப்பட்ட மூன்று கோட்டைகளைக் கேட்டுப் பெற்றனர். அதில் ஏறி அண்டங்களைவலம் வந்தனர். ஆணவ மிகுதியால் தேவலோகம் அடைந்து, தேவர்களை சிறை பிடித்து, தங்களது கோட்டைக்குள் ஏற்றிப் பூட்டிப் பறந்தனர்.

பூலோக வாசிகள் நசுக்கி அழித்தனர், தேவர்கள் திக்கு முக்காடினார்கள்.

முப்படை அசுரர்களிடம் சிக்காத எஞ்சிய தேவர்கள் ஈசனை சரணடைந்தனர்.

அசுரர்களிடம் போர் புரிய திட்டம் வகுத்தார் பரமன். எவ்வாறு?? கீழ் ஏழு உலகங்களை அடித்தட்டாகவும், மேல் ஏழு உலகங்களை மேல் தட்டாகவும் ஆக்கினார்.

தேர்ச் சக்கரங்களாக சூரிய சந்திரர்களை பொருத்தினார். இமயத்தை கொடியாக்கி பறக்க விட்டார். நான்கு வேதங்களையும் குதிரைகளாக்கி, பிரம்மாவை சாரதியாக்கினார்.

மேருமலையை வில்லாக வளைத்து, ஆதி சேஷனை வில்லின் நாணாக இழுத்துக் கட்டினார். திருமாலை அம்பாக்கி, திரிபுராசுரக் கோட்டைகளை நோக்கி குறிவைத்தார்.

இத்தனை செய்த சிவனார் ஒன்றை மட்டும் மறந்தார். என்ன அது?? முழு முதற்கடவுளான கணபதியை வணங்குவதைத்தான் !!!!

விடுவாரா கணேசர்? தேரின்அச்சினை நோக்கினார். அச்சு இரண்டாகப் பிளந்து, தேர் தள்ளாட ஆரம்பித்தது. தேவர் கூட்டம் நிலை தடுமாறியது.

காரணம் உணர்ந்தார் கயிலை நாதர்.' 'முப்பத்து முக்கோடி தேவர்களுடன், துணையாய் நின்ற பரமேஸ்வரனும் கணபதியை கைதொழுது வணங்கி நின்றார்.

மகிழ்ந்தார் கணபதி. அச்சு முறிந்ததும்,தேரின் பலம் கூடியது... விநாயகரின்


www.aanmeegamalar.com














விவேகத்தால் விவேகத்தால்...!நேர்கோட்டில் வந்த முப்புராதி அசுரர்களை தனது சிரிப்பினாலேயே வீழ்த்தி அழித்தார் விஸ் வேஸ்வரர்.

கணபதியை மறந்த அந்த கங்காதரருக்கே இப்படி என்றால் நாம் எங்கே??? ஆனைமுகன் தேர் அச்சினை ஒடித்து, இரு பாகங்களாக்கிய அந்த இடமே [அச்சு + இரு + பாகம்] அச்சிறு பாக்கம் ஆனது.

இந்த நிகழ்ச்சியை அருணகிரிநாதர் "முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி

செய்த அதிதீரா" என்று அற்புதமாகபதிகின்றார் தனது திருப்புகழில்..! நம் வாழ்க் கையென்னும் தேரும் சரியாக நகர அந்த கணபதியின் கருணை வேண்டும் என்பது இந்த புராண சம்பவத் தால் நிதர்சனமாகின்றது.

பாண்டிய மன்னன் ஒருவன் பெரும்படையோடு வடநாடு நோக்கிச் செல்கையில் இவ்வூரின் அருகில் தங்கினான். அருகே முல்லைக் கொடிகள் சூழ்ந்த வனத்தில் ஒரு பொன்நிற உடும்பைக் கண்டு. அதை துரத்திச் சென்றான். அந்த உடும்பு ஓர் சரக்கொன்றை மரத்தின் அடியில் இருந்த பொந்து ஒன்றில் ஓடி மறைந்தது.

தனது ஏவலர்களைக் கொண்டு அந்த மரத்தின் அடிபாகத்தை வெட்டினான். அதிலி ருந்து குருதி பீறிட்டது. பயந்து போன மன்னன் நெருங்கிச் சென்று பார்க்கையில், சுயம்பு லிங்கம் ஒன்றைக் கண்டு வியந்தான். வியர்த்தான். சிவ அபராதம் செய்ததாக எண்ணி வருந்தினான். கண் அயர்ந்தான். கனவில் தோன்றினார் கைலாயநாதர். தனக்கு ஆலயம் எழுப்பும்படி









பணித்தார்.

மறுநாள் கண் விழித்த மன்னன் நடந்தவற்றை த்ரிநேத்ரதாரி முனி வரிடம் கூறினான். பரமனுக்கு ஓர் ஆலயம் எழுப்பும்படி அவரிடம் கூறிப் புறப்பட்டான். அதுபடியே ஆலயம் எழுப்பினார் முனிவர். அதன்பின்,திர நேத்ரதாரி முனிவர் கடும் தவத்தில் மூழ்கினார். தவத்திற்கு இரங்கிய சிவபெருமான், அவர்முன் தரிசனம் தந்து, வேண்டும் வரம் கேட்டார்.



மோ.கணேஷ்

திரிபுரம் எரித்து, தேவர்களுக்கு அருள் புரியும் காட்சியை அருள வேண்டினார். அதுபடியே அருளி மறைந்தார் மகேசர். பின்னர் அரனாருக்கு ஆலயமும் எழுப்பினார். அது முதல் ஆண்டுக்கு ஒருமுறை பிரம்மோற்ஸவத்தின் போது ஏழாம் நாள் மாலை வேளையில் தலவிருட்சமான சரக்கொன்றை மரத்தடியில் திரிநேத்ரதாரி

முனிவருக்கு தேரிலிருந்து இறங்கி, இறை வன் காட்சி தரும் கொன்றையடி தேவை இன் றும் நடத்தப்படுகின்றது. பின்னர் மன்னனை ஆட்கொண்ட இறைவன் ஆட்சீசர் என்றும், திரிநேத்ரதாரி முனிவருக்கு

காட்சி தந்த இறைவன் உமையாட்சீசர் என்றும் போற்றலானார். கணவ மகரிஷியும், கௌதமரும் இத்தலப் பெருமானை வணங்கி, வழிபட்டு, பேறுகள் பல பெற்றுள்ளனர். சான்றோர்

நிறைந்த தொண்டைநன்நாட்டின் தேவாரத்தல வரிசையில் 29 வது இடத்தை வகிக்கும் இந்த அச்சிறுபாக்கத்தின் மீது திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் போற்றியுள்ளார். அப்பர் தனது க்ஷேத்திரக்கோவையில் இத்தலத்தை நினைவில் வைத்துப் பாடியுள்ளார். இராமலிங்க வள்ளலார் மற்றும் உமாபதிசிவமும் இப்பதியை பாடிப் போற் றியுள்ளனர்.

ஊரின் தென்கோடியில் பிரம்மாண்டமாய் அமைந்துள்ளது திருக்கோவில், கோயிலின் எதிரில் கணபதிக்கு தனி ஆலயம் உள்ளது. உயர்ந்த மதில்கள் நாற்புறமும் சூழ நடுநாயகமாய் கிழக்குப் பார்த்த அழகிய ஐந்து நிலை இராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. உள்ளே வட புறம் விமானத்துடன் கூடிய அம் பாளின் தனிச் சந்நிதி... வெளிப்புற மண்டபம்,

அர்த்தமண்டபம்,கருவறைஎன்கிற அமைப்பின் அமையப்பெற்றுள்ளது புன்னகை சிந்தியபடி நின்றவண்ணம் அபயமளிக்கின்றாள் ஸ்ரீசாந்தநாயகி, இளங்கிளிமொழியம்மை, அதிசுந் தராம்பிகை போன்ற பெயர்களாலும் அழைக்கப் படுகின்றாள். தென்புறம் சப்தமாதர்கள் சந்நிதி, மடப்பள்ளி மற்றும் ஆலய நிர்வாக அலுவலகம் ஆகியன அமைந்துள்ளன. ' நேராக பலிபீடம், கொடிமரம், நந்தி மண்டபம் காணப்படுகின்றன. விதானத்தில் பஞ்ச மூர்த்திகளின் தரிசனம். சன்னதிகள் யாவும் மூடுதளத்துடன் அமைக் கப்பெற்றுள்ளது.

இரண்டாம் வாயிலுள் நுழைய... முதலில் தல கணபதியான அச்சுமுறி கண்பதியின் கம்பீர தரிசனம் நம்மை பரவசப்படுத்துகிறது. வடபுறம் ஆடவல்லாரது அருமை தரிசனம். நடராஜப் பெருமானது சந்நிதிக்கு வலப்பக்கம் ராமலிங்கரும், இடப்பக்கம் அருணகிரிநாதரும் அருட்காட்சியளிக்கின்றனர். அருகே பைரவரும் தரிசனம் தருகின்றார். இறைவன் சந்நிதி மகா மண்டபம், அர்த்த மண்டபம், மூலஸ்தானம் ஆகிய அமைப்பினில் உள்ளது. கருவறையுள் கருணாமூர்த்தியாக, கற்பகமாக, சிறிய உருவில் தரைமட்டத்திலிருந்து சுமார் ஒரு அடி உயரத்தில் சதுர ஆவுடையாரின் நடுவே சுயம்பு நாதனாக அருட்பிரவாகிக்கின்றார் ஸ்ரீ ஆட்சீஸ்வரர்.

பார்த்தவுடன் நம் உள்ளத்தையும் ஆட்சிபுரிய துவங்கி விடுகின்றார். பூமியிலிருந்து தானாகவே முளைத்தெழுந்து தயை புரியும் இந்த தயாபரனார்

 

ஸ்திரவாசபுரீஸ்வரர், பாக்கபுரேசர் போன்ற பெயர்களாலும் அழைக் கப்படுகின்றார்.

பாண்டியமன்னனால்வெட்டப் பட்டபள்ளமானது லிங்கத்திரு மேனியின் பின்புறம் காணப்படு கின்றது. அரிய இந்தபெருமானை வணங்கி, உடன் மகாமண்டபத் துள் எழுந்தருளும் சோமாஸ்கந் தரை தரிசித்து, வலம் வரு கையில், இரண்டாம் வாயி லின் இடப்புறம் அனுமனும்,பொல் லாப்பிள்ளையாரும் தரிசனமளிக் கின்றனர். வடப்புற வரிசை யில் 63 நாயன்மார்கள் வீற்றெழுந்துள்ளார் கள்.



நிருர்த்தி மூலையில்பத்மா வதித் தாயாருடன் ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள்பக்தர்களுக்குஅருட் சேவை புரிகின்றார். அலங்கரிக்கப் பட்ட இப்பெருமாள் சிவநேசர்களையும் தன்பால் ஈர்த்து விடுகின்றார். அடுத்தபடியாக தனி விமானத்துடன் கூடிய பிரத்யேக சன்னதியில் தன்னாட்சி புரிகின்றார். ஸ்ரீ உமையாட்சீஸ்வரர்! அன்னை உமாபார்வதியுடன் எழுந்து திருவருள் புரிகின்றார். கருவறை பின் சுவற்றில் திருவுருவ மேனியராய், அம்மையுடன் அமர்ந்தும் திருமணக் காட்சி தந்து திருவருள் கூட்டுகின்றனர்.

பின் பழனியாண்டவர் சந்நிதி கொண்டுள்ளார்.

அடுத்தடுத்து துர்கா, லட்சுமி, சரஸ்வதி, கிருபாகடாக்ஷிகின்றனர். வாயு திசையில் வள்ளி, தெய்வானையுடன் ஸ்ரீ ஷண்முகேஸ்வரப்பெருமான்

ஒளிபொருந்த விளங்குகின்றார். தென்புற வரிசையில் அறுபத்து மூவரின் உற்சவத் திரு மேனிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு திருச்சுற்றுகள் கொண்ட இவ்வாலயத்தின் வெளிப் பிரகாரத்தில் திருமஞ்சன மண்டபம் உள்ளது. வடபுறத்தில் தலவிருட்சமான சரக் கொன்றை மரம் அழகு சித்திரமாய் காட்சி

தருகின்றது. அருகே திருமஞ்சனக்கிணறு ஒன்றும் உள்ளது. இத்தலத்தின் தீர்த்தங்களாக சிம்ம தீர்த்தம், வேத தீர்த்தம் மற்றும் சங்கு தீர்த்தம் திகழ்கின்றது.

நான்கு கால பூஜைகள்நடை பெறும் இவ்வாலயம் தினமும் காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரையும் திறந்திருக்கும் பாண்டியர்காலக் கல்வெட்டுகள் இங்கு பரவிக் கிடக்கின்றன.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயத்தில், ஆனித் திருமஞ்சனம், பிள்ளையார் சதுர்த்தியன்று விநாயகர் திரு வீதி உலா, அன்னாபிஷேகம், கார்த்திகை வீதியுலா, ஆருத்ரா, தைக் கிருத்திகையில் சந்திரசேகரர் சுப்பிரமணியர் திருவீதியுலா, சிவராத்திரி மற்றும் பங்குனியில் பிரம்மோற்ஸவம் ஆகியன விசேட ங்களாக நடத்தப்படுகின்றன.

இத்தல அச்சுமுறி கணபதி காரிய சித்தி யையும், நவகிரக தோஷங்களிலிருந்து நிவர்த் தியும் அளிப்பதில் வல்லவர் ஆவர்.

அரசு வேலை கிடைக்கவும், அரசு காரியங் களில் ஏற்படும் தடைகள் தீரவும், பதவி உயர்வு கிடைக்கவும், ஆட்சிப் பொறுப்பில் இருப்ப வர்கள் ஸ்திரத்தன்மை பெறவும், ஆட்சி பலம் கூடவும், ஆளுமைத் திறன் அதிகரிக்கவும் இத்தல ஆட்சீஸ்வரப்பெருமானை வழிபடுவதே உசிதமானதாகும்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலு காவில் அமைந்துள்ள இவ்வூர், சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மேல்மருவத்தூருக்கு 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

**பழங்காமூர் மோ.கணேஷ்.**
**தொடர்பு எண்: 9789156179**

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

Gmail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# பசியை போக்கி சேவைபுரியும் வள்ளளார் இறையருள் மையம்

"வாடிய பயிரை கண்டபோது எல்லாம் வாடினேனன்" ஏழைகளின் பசி பிணி போக்குவதே ஜீவகாருண்யம் இந்த ஒழுக்கம் ஒன்றே பேரின்ப வீட்டின் திரவுகோல் பசித்த வயிறுக்கு உணவு அளித்தவன் பெரும் புன்னியத்தை அடைவான்.

நோய் நோடிகள் விலகி அன்னதானம்செய்வோர்க்கு நீண்ட ஆயுள் கிடைக்கும். என்று வள்ளளார் வாக்கின் படி திருப்பூர் கருவம்பாளையதில் அகில உலக வள்ளளார் இறையருள் மையம் தற்போது கொரோனா கால கடமையாக மாவட்ட முழுவதும் தொடர் சேவையாக 760 நாள்களாக 14 சமுதாய சமையல் கூடங்களின் நூற்றுறக்கு மேற்பட்ட தான்னார்வ சேவடியார்களை இணைத்துக்கொண்டு 250க்கும் மேற்பட்ட கிராம நகர பகுதிகளில் தினமும் இரண்டு வேலை சுமார் 15,000 மக்களுக்கு அறுசுவையுடன் உணவு வழங்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

இது தவிர ஏழை எளிய மக்களுக்கும் கருணை இல்லங்களுக்கும் தினமும் மையத்தில் சேகரிக்கப்படும் காய்கறி தொகுப்புகளையும் தேடிச் சென்று வழங்கி வருகின்றனர்.

இந்த பெரும் தொற்று காலத்தில் மக்கள் பசியுடன் இருக்க கூடாது என 24 மணி நேர ஜீவகாருண்ய கடவுள் வழிபாட்டின் ஒரு பகுதியாக தினமும் ஊரடங்கு வேலையில் உன்னத பணியாக இரவு பகலாக திருப்பூர் மாவட்ட மக்களின் பசியை போக்கி வருகின்றனர்.

மாவட்டத்தில் சேவடியார்களை வாட்சப் குழு மூலம் இணைத்துக் கொண்டு இந்த பணியை செய்து வருகின்றனர் இராமபிண்ணுக்கு உதவிய அணில் போல் ஏராளமான சேவடியார்கள் வள்ளளார் இறையருள் மையத்தில் இணைத்துக் கொண்டு ஆன்மீக சேவையுடன் இப்பணியை பெருந்தொற்று காலத்தில் செய்து வருகின்றனர்.

இவர்களின் வாட்சப் குழுவில் எப்போதும் உணவு ரெடியாக உள்ளது, காய்கறி தொகுப்புகள் உள்ளது, அரிசி உள்ளது வந்து ஏழை எளிய மக்கள் எடுத்து செல்லவும் என சேவடியார்களின் குரல் ஒலித்துக்கொண்டே உள்ளது.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதிதனிப் பெறும் கருணை அருட்பெருஞ்சோதியாக


www.aanmeegamalar.com

வள்ளளாரே வந்து வரம் வழங்கியது போல் எல்லா ஜீவ ராசிகளையும் பசியோடு இருக்க விடாமல் தினமும் சாம்பார் சாதம், தக்காளி சாதம், காய்கறி கலவை சாதம், கஞ்சி மற்றும் சமைத்தது போக, மீதம் உள்ள காய்கறி தொகுப்புகளை முதியோர் காப்பகம் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கி வருகின்றனர்.

அகில உலக வள்ளளார் இறையருள் மையம் தற்போது வரை சத்திய தர்ம தொழில்சாலையாகவே மாறி தினமும் நூற்றிஜம்பதிக்கு மேற்பட்ட தன்னார்வ சேவடியார்கள் மக்கள் பசியுடன் இருந்து விட கூடாது என வள்ளளாரின் வாக்கின் படி கொரோனா கால கடமையாக செய்து வருகின்றனர்.


அழகுராஜா

இராமயண அணில் போல்நாமும் உதவ நினைத்தால் இதில் குறிப்பிட்டு உள்ள தொடர்பு எண்ணில் 6374660835 தொடர்பு கொண்டு சேவடியார்களாக மாறி திருப்பூர் கருவம்பாளையத்தில் உள்ள முழு நேர ஜீவகாருண்ய கடவுள்வழி பாட்டு தலம் அகில உலக வள்ளளார் இறையருள் மையத்திற்க்கு இறை சேவை செய்யலாம். கோவில்களில் சென்று தொழுவதற்கு ஈடாக மற்றவரின் பசியை போக்கி அதில் கடவுளை பார்க்கும். இந்த தொண்டு மேலும் சிறக்க பிரார்த்திப்போம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182


www.aanmeegamalar.com

# உடல் மாசுகள் அழிந்து ஆரோக்கியம் பெருக்கும்

# சூரிய தரிசனம்




கடவுள் உருவாக்கிய மதம்

வைகரையில் சூரிய தரிசனத்தை பெறும்படி வேத ரிஷி ஏன் வற்புறுத்துகிறான். அந்த நேரம் மனிதனின் உடலும் மனமும் பிரபஞ்ச சக்தியை உள் வாங்கக் கூடியதாக இருக்கிறது. சூரிய கதிர்கள் கண்களிலும் உடல் முழுவதும் அந்த நேரம் பரவி னால் மனிதனின் அறிவாற்றல் பலமடங்கு கூடும். சிந்தனையின் வேகம் செழுமைபடும். எதையும் துணிந்து செய்யக் கூடிய மன தைரியம் அதிகரிக்கும். உடலிலுள்ள மாசு கள் அழிந்து ஆரோக்கியம் பெருகும். இந்த உண்மையை அவன் அறிந்து பாடி னானா அறியாமல் பாடினானா என்பது முக்கியமல்ல. இந்த பாடல் வரிகள் சூரிய சக்தியை நமக்கு அதிகபடுத்தி தருவதாக இருப்பது அறிவியல் உண்மையாகும்.

இனி சமுதாய சிந்தனைகளை கொண்ட ரிக் வேதத்தின் ஆறாவது மண்டலத்தை பார்ப்போம்.

சமூகம் என்பது ஆண்களையும் பெண்களையும் கொண்டது மட்டுமல்ல குழந்தைகளையும், முதியவர்களையும், பல மற்றவர்களையும், நோயாளிகளையும் கொண்டதே ஆகும். பலசாலிகள் அப்படி பட்ட பலஹீனர்களை காப்பாற்ற வேண்டும் உணவளித்து பாதுகாக்க வேண்டும் என்று ரிக் வேதம் வலியுறுத்துகிறது.

ஆறாவது மண்டலம் 75வது சூத்தகம் சமூகத்தை நேசி அதற்கு மதிப்பு கொடு, பசியால் வாடுவோருக்கு ஆகாரம் கொடு, சிரமத்தில் சிக்கியோன் துன்பத்தை போக்க போராடு, அதற்காக உனது சக்தியை பெருக்கிகொள், ஆற்றலை வளர்த்துக் கொள், உனது கௌரவத்தை திரட்டிக்கொள், உயர்ந்த செயலுக்காக உன்னிடமுள்ள துணிச்சல் உச்ச நிலையை அடையட்டும். உனது கைகளிலுள்ள ஆயுதங்கள் எதிகளை மட்டுமல்ல அதர்மத்தையும் சாய்க்கும் ஆற்றலை பெறும் வண்ணம் பயிற்சி எடுத்துக்கொள். தர்மத்திற்கு மாறானவைகளிடமும் எதிகளிடமும் நிமிர்ந்து நிற்க்கும் சுபாவத்தை வளர்த்துக் கொள். மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் பண்பை பெறுக்கி கொள் என்றெல்லாம்

மனிதனுக்கு அறிவுரை தருகிறது.

அடுத்ததாக முழுமுதற்கடவுளான விஷ்ணுவை பற்றி குறிப்பிடும் ரிக் வேதத்தின் ஏழாவது மண்டலத்தை பார்ப்போம். இந்த இடத்தில் ஒரு உண் மையை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். வேத பாடங்களில் எந்த இடத்திலேயும் விஷ்ணுதான் மூலப்பரம் பொருள் என்று குறிப்பிடப்படவில்லை.

இந்திரன் வருணன்போன்ற தெய்வங்களுக்கு கொடுக்கப்பட்டிருக் கின்ற முக்கியத்துவம் கூட கொடுக்கப்படவில்லை. விஷ்ணு என்று அழைக்கப்படும் திருமால்தான் தெய் வங்களுக்கெல்லாம் தெய்வம் என்ற கருத்து வேதகாலத்திற்கு பின்பு வந்ததே ஆகும்.

உபநிஷதங்களின் சாரமாக கருதப்படும் வேதாந்தம் என்பது நடைமுறைக்கு வந்த பிறகுதான் விஷ்ணு பரம்பொருளாகக் கருதப்பட்டு வைணவ சம்பிரதாயத்தில் முதல் தெய்வமாக உயர்த்தப்படுகிறார். இப்படி வேதத்தில் விஷ்ணுவை பிரதானபடுத்தாமைக்கு வேறொரு காரணத்தையும் கூறலாம்.

வேத பாடல்கள் அனைத்துமே ஒருவரால் உருவாக்கப்படவில்லை ஒரே காலகட்டத்திலும் ஆக்கப்படவில்லை பல ரிஷிகளால் பல காலத்தில் அறியபட்டதே வேதபாடல்களின் தொகுப்பாகும். எனவே ஒவ்வொரு பாடலும் தான் போற்றும் தெய்வமே சிறந்தது உயர்ந்தது இணையற்றது என்று கருதுகிறது.

அதனால் மற்ற தெய்வங்களை பாடிய ரிஷிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் விஷ்ணுவை பாடிய ரிஷிகளின் எண்ணிக்கைகுறைவாகவும் இருப்பதனால் வேதத்தில் விஷ்ணு வின் தரம் தாழ்த்தப்பட்டிருப்பதாக கருத முடியாது.

இந்திய தத்துவங்கள் சிந்தனை மரபுகள் மதக் கோட்பாடுகள்



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

உருவாக வேதங்கள் பாதைகளை மட்டுமே அமைத்து கொடுத்து இருக்கிறது மற்றபடி உள்ள வளர்சிகள் அனைத்துமே உபநிஷதங்களாலும் இதிகாச புராணங்களாலும் ஏற்படுத்தப்பட்டிக்கிறது என்பதை உணர்ந்து கொண்டால் எந்த குழப்பம் ஏற்படாது. இனி விஷ்ணுவை பற்றிய வேத வரிகளை பார்ப்போம்.

விஷ்ணுவே நீ தான் அனைத்திலும் உயர்ந்தவன். மிகச் சிறந்த அரியாசனத்தில் அமர்ந்திருப்பவன் ஏனென்றால் இந்த மண்ணில் பிறந்த நாங்கள் பூமியின் அனைத்து பகுதிகளையும் அறிந்து கொள்ள முடியாத அர்பர்களாக இருக்கிறோம். ஆனால் நீ எல்லா இடங்களை அறிந்தவனாகவும் எங்கும் இருப்பவனாகவும் எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளாய். நீ விஸ்வரூபம் எடுத்து உயரும் போது எல்லாமே உனக்குள் அடங்கி விடுகிறது. உனது விஸ்வரூபத்திற்கு எல்லைகளை வகுக்கும் ஆற்றல்






எங்களுக்கு இல்லை. அதனால் உனது பெருமையில் சந்தேகப்படும் தகுதி எந்த மனிதனுக்கும் இல்லவே இல்லை. நீ தான் உயர்ந்தவன் சிறந்தவன் என்று உன்னை துதிக்கும் எனக்கு ஆதாரமாக இருப்பதுவும் நீயே ஆகும். நீ பெரு வடிவம் எடுத்து நிர்க்கும் பொழுது உனது சிரசு சொர்க்கத்தையும் தாண்டி மேலே நிற்க்கிறது. உன் பலம் பொருந்திய பாதங்கள் பாதாளத்தையும் தாண்டி கண்ணுக்கு புலப்படாமல் இருக்கின்றன. திசைகள் அனைத்தும் உனது கைகளுக்குள் சிறைபட்டு கிடக்கிறது. மனித சமூகம் தனது சக்திகள் அனைத்தையும் திரட்டிக் கொண்டாலும் உனது பெருமையின் ஒரு துளியை மட்டுமே கணித்து பார்க்க முடியும். இது இப்போது இருக்கும் எங்களின் கருத்துமட்டுமல்ல. எங்களுக்கு முன்னால் இருந்தவர்களும் இப்படித்தான் கருதினார்கள் இனி வரப்போகிறவர்களும் இப்படிதான் கருதுவார்கள்.

விஷ்ணுவை பற்றி இன்னும் சில குறிப்புகள் ரிக் வேதத்தில் உள்ளது. அவற்றில் முக்கியமானதாக இந்த பகுதியை நான் சுட்டி காட்டுவதற்கு வேறொரு காரணம் உண்டு. நமது புராணங்களை பற்றி குறிப்பிடும் பொழுது அவைகள் வேதங்களுக்கான விளக்க உரைகளே என்று பொதுவான கருத்துகள் சொல்லப்படுவது உண்டு. வேதங்களை புராணங்கள் எந்த வகையில் விளக்குகின்றன என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளவே இந்த பகுதியை மட்டும் தொட்டேன். விஷ்ணுபுராணத்தில் நாராயணன் வாமன அவதாரமும், திருவிக்ரம் அவதாரமும் எடுத்த விதத்தை வர்ணனை செய்யப்பட்டிருப்பதை எல்லோரும் அறிவீர்கள். அந்த வர்ணனையோடு ரிக் வேத கருத்துகளை பொறுத்தி பார்த்தால் வேத விஷயங்கள் புராணங்களில் எந்த வகையில் எடுத்தாளப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலனாகும்.

மேலும் ரிக் வேதத்தில் வேதத்தின் பெருமையை பற்றி எட்டாவது மண்டலமும் விடியலை பற்றி ஒன்பதாவது மண்டலமும் சதுரங்கம் முதலான அறிவு சார்ந்த விளையாட்டுகளை பற்றி பத்தாவது மண்டலமும் பேசுகிறது. அவைகள் முக்கியம் வாய்ந்தவைகள் என்று கருதினாலும் கூட நாம் எடுத்திருக்கின்ற மதம் சார்ந்த சிந்தனை ஓட்டத்திற்கு அவைகள் தற்போது தேவைபடாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# ஞாபக சக்தியின் அறியப்படாத உள்ளார்ந்த ஆற்றல்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: “ஞாபகசக்தி ஒரு முக்கியமான மனிதத்திறன். எதையுமே நம் நினைவிற்குக் கொண்டுவர முடியவில்லையென்றால் அது எப்படி இருக்குமென்று கற்பனை செய்து பாருங்கள்! நம்முடைய எந்தச் செயல்களின் விளைவுகளையும் நல்லதோ, கெட்டதோ, நம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. வாழ்க்கை முழுவதும், ஒவ்வொரு செயலையும், ஒவ்வொரு சிறு தகவலையும் செய்யவோ அல்லது தெரிந்துகொள்ளவோ வேண்டிய ஒவ்வொரு தடவையும் முதல் முறை என்பது போன்று தெரிந்துகொள்ளப்படவேண்டும். நினைவுத்திறன் இல்லாமலிருந்தால் குழந்தைகளைப்போல்தான் இருப்போம். ஆங்கிலத்தில் ‘ரிமெம்பர்’ எனும் வார்த்தை ரி மீண்டும், ‘மெமரி’ கவனத்தில் வைத்திருத்தல் என்பதிலிருந்து வருகிறது. ஞாபகம் என்பது ஒவ்வோர் எண்ணம் செயல் அல்லது அனுபவமானது. அது முதலில் நிகழும்பொழுது உண்டாக்கபடுகின்ற மூலமனக்குறிப்பாகும். ஒவ்வொரு நினைவும் ஒரு குறிப்பிட்ட எண்ணவடிவமாக மூளையில் பதிவு செய்யப்படுகிறது. ஞாபகத்திற்குக்கொண்டுவருவதென்பது இந்த எண்ணற்ற பதிவுகளிலிருந்து எதாவது ஒன்றை உணர்வுபூர்வமான கவனத்திற்குக்கொண்டு வருவதாகும்.”

மேலும் அவர் அருளுகிறார்: “கடந்த பிறவிகளின் நம்முடைய எல்லா அனுபவங்களும்., இந்தப் பிறவியில் பிறந்தது முதல் நிகழ்ந்துள்ள அனுபவங்களும் நம்முடைய ஆழ்மனதில் உள்ளன. இருப்பினும் பெரும்பாலான மக்களுக்கு கடந்த பிறவிகளில் அவர்கள் யாராக இருந்தார்கள், எங்கிருந்தார்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் போன்றவற்றையோ அல்லது இந்தப்பிறவியில் சிறுவயதில் நடந்த அதிகமான விஷயங்களையோ பற்றிய ஞாபகம் இல்லை. ஆனால் நேற்றைய தினம் என்ன உணவு சாப்பிட்டீர்கள், அதை எங்கு சாப்பிட்டீர்கள் போன்ற சமீபகால மிகச் சிறிய விவரங்களைக்கூட உங்களால் எளிதாக நினைவிற்குக் கொண்டுவர முடியும். இதைப்போன்ற இந்தப் பிறவி மற்றும் முந்தைய பிறவிகளின் எல்லா எண்ணற்ற அனுபவங்களையும் முழுவதும் நினைவு கூர்வதானது, உங்களுடைய விழிப்புநிலை மனம் நிரம்பிவிடும் என்பதால் உங்களுக்கு அமைதியில்லாமல்




www.aanmeegamalar.com

போய்விடும். நல்லகாலமாக, ஞாபகம், தேர்ந்தெடுக்கும் பண்புடையதால் உங்களுடைய அனுபவங்களின் முக்கியமான விவரங்களை நினைவு கூர ஏதுவாகிறது. அதே சமயம் அவற்றை நீங்கள் நினைக்கும்பொழுது மறுபடியும் முழு விவரத்துடன் வாழ அவசியம் இல்லாமல் செய்கிறது. நீங்கள் மிகவும் வலிமையான ஞாபக சக்தியை வளரச் செய்தால்தான் கடந்த பிறவிகளை நினைவுகூர முடியும். "

"ஆன்மீக அறிவொளி பெற்ற ஒருவரின் நினைவுத் திறன் சராசரி மனிதனுடைய நினைவுத் திறனைவிட முற்றிலும் மாறுபட்டு வேலை செய்கிறது. உதாரணத்திற்கு நினைவிற்குக் கொண்டுவராமல் அல்லது உங்கள் உணர்வு நிலையில் அந்த விழிப்புணர்வை மீண்டும் ஏற்படுத்தாமலேயே உங்கள் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்கள்.

உங்களுக்கு ஓர் உடல் இருக்கிறது என்ற உண்மையை நீங்கள் மறுபடியும் நினைவிற்குக் கொண்டுவர வேண்டியதில்லை. அது உங்களுக்குத் தெரியும். ஏனென்றால் உங்கள் உணர்வு உங்கள் உடல் முழுவதும் விழித்திருக்கிறது. அதைப்போலவே ஒரு பெரும் உயரிய அளவில் இறைவன் எல்லாவற்றிலும் இருக்கிறான். மேலும் எல்லாம் அவனுள் இருக்கிறது.

அவனுக்கு ஞாபகம் கிடையாது. அவனுக்கு ஞாபகத்திற்கான அவசியமில்லை. ஏனென்றால் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால எல்லா அனுபவங்களிலும் அவன் எங்கும் நிறைந்தவனாக இருக்கிறான். அவனுடைய நித்திய உணர்வு பூர்வமான விழிப்புநிலையில் அவனுக்குக் கடந்தகாலம் என்று நினைவு கூர எதுவுமில்லை. என்னுடைய சொந்த அனுபவத்தில், அழியும் மனித நினைவு மங்கி மறைவதைக் காண்கிறேன். என்னுடைய நித்தியமான எங்கும் நிறைந்த ஆன்ம இயல்பின் தெய்வீக உணர்வு மேலோங்கி இருக்கிறது. இத்த உணர்வு நிலையில் என்னுடைய மனச் செயல்பாடுகளினாலோ அல்லது ஞாபகத்தினாலோ அல்லாமல் உள்ளுணர்வு அனுபவங்களாக எல்லா ஞானமும், அறியும் சக்தியும் என்னிடம் வந்தடைகின்றது."

அவர் மேலும் கூறுகிறார்: "ஞாபகமானது கடந்தகால மற்றும் மறக்கப்பட்டுவிட்ட அந்த அனுபவங்களை உணர்வு நிலையில் மீண்டும் ஏற்படுத்துகிறது. தற்பொழுது நடப்பவற்றிற்கு நமக்கு ஞாபகம் தேவையில்லை. இங்கே இந்த ஆலயத்தில் நம்மைச் சுற்றி உணர்வு பூர்வமாகப் பார்க்கும்பொழுது, சன்னல்கள், திரைச்சீலைகள் மற்றும் அறையின் இதர விவரங்களைப்பற்றி நாம் அறிகிறோம், ஆனால் இதைப்போல் இந்த ஆலயத்தின் வேறெந்த பகுதியையும் 'பார்ப்பதற்கு' இதற்குமுன் எவற்றை நாம் அங்கு கவனித்தோமோ அவற்றை மீண்டும் ஏற்படுத்த நாம் ஞாபகத்திற்குத் திரும்ப வேண்டும்," என்கிறார்.


குருப்ரியா

நாம் செய்கின்ற நல்லவற்றின் ஞாபகம் எப்பொழுதும் நமக்கு இருந்தால் நல்லது. அதற்கு பகவத் கீதா அத்.17 ஸ்லோகம் 14 ல் ஸ்ரீ கிருஷ்ணன் அருளுகிறார்:

தேவத்விஜ குருப்ராஜ்ஞபூஜனம் சௌஜ மார்ஜ்ஜவம்
ப்ரஹ்மசர்யமஹிம்ஸா ச சாரீரம் தப உச்யதே.

தவத்தின் சம்பிரதாய விஷயங்களை கூறுகிறேன். சரீரம், மனம், வாக்கு இவைதான் காரணங்கள். இவற்றை தெய்வீகமாக்கும்பொழுது எப்படியிருக்கும் என்பதைக் கூறுகிறேன். தேவர்கள், பிராமணர்கள், குருஜனங்கள் வித்வான்கள் ஆகியவர்களை பூஜிக்க வேண்டும்.

சரீரத்தை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அதர்மமான செயல்களை செய்யாமலிருக்க வேண்டும். தார்மீகமான செயல்களை மட்டும் செய்ய வேண்டும்.

மனம், வாக்கு செயல் இவற்றால் பிரம்மச்சர்யத்தையும் அஹிம்ஸையையும் கடைபிடிக்க வேண்டும். தர்மங்களுக்கு விரோதமான விஷயங்களை செய்வதற்காக சரீரத்தை ஒருபொழுதும் பயன்படுத்தாமலிருக்கவேண்டும். இவ்வாறான வாழ்க்கை உடல்ரீதியான தவமாகிறது.

இவ்வாறு செய்வது கடந்தகால மற்றும் மறக்கப்பட்டுவிட்ட அந்த அனுபவங்களை உணர்வு நிலையில் மீண்டும் ஏற்படுத்துகிறது என்பதை குருதேவர் உணர்த்துகிறார்.

அனைத்திற்கும் மேலாக இறைஉணர்வுடன் இருப்பது அனைத்தையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. 'வியாசரின் வருத்தம்' என்ற தலைப்பிலுள்ள ஒரு கதையை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

வியாசமுனிவர் இறைவனின் திருமுன்னர் நின்றிருந்தார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. " ஆண்டவனே! நான் அறியாமல் செய்த மூன்று பிழைகளையும் நீதான் பொறுத்தருளவேண்டும்" என்று

108
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

அழுது வேண்டினார். அதைப்பார்த்து அங்கிருந்த அனைவரும் வியப்பு அடைந்தனர். வேதவியாசர் என்ன பிழை. செய்திருப்பார் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அவர்களுக்குள் பேசிக்கொண்டனர், விடை ஒன்றும் கிடைக்கவில்லை.

அவர்களில் ஒருவன் “துறவியாரே! தாங்கள் செய்த பிழைகள் என்ன?” என்று பணிவாகக் கேட்டான். அதற்கு அவர், “வடிவம் இல்லாத இறைவனை வடிவம் உள்ளவராக நினைத்து வழிபட்டது ஒரு பிழை. வாக்கிற்கு அகப்படாத இறைவனை நாவினால் புகழ்ந்து பாடியது இரண்டாவது பிழை.

எங்கும் நிறைந்த பரம் பொருளாகிய இறைவனைக் காணவேண்டி ஊர் ஊராகப் புனிதப்பயணம் மேற்கொண்டது மூன்றாவது பிழை ,இம்மூன்று பிழைகளையும் பொறுத்தருள வேண்டினேன் .“

இக்கதையின் பொருள் என்னவென்றால், அவ்வளவு பெரிய முனிவராகின்ற வியாசரே, தான் அறியாமல் செய்த தன் தவறுகளை உணர்ந்து, இறைவனிடத்தில் சரணடைந்து கண்ணீருடன் தன்னை மன்னித்தருள வேண்டினார். அதற்கு பிரபஞ்சத்தைப் பரிபாலித்துக்கொண்டிருக்கின்ற அவருக்குள் இருக்கின்ற எங்கும் நிறைந்துள்ள இறைவன் அவரை மன்னித்து மேலும் தவறு செய்யாத மனநிலையையும் மற்ற அனைத்து சக்தியையும் அருளினான்.

குருதேவர் தன்னுடைய போதனையில் கூறுவதுபோன்று, கடந்த பிறவிகளிலுள்ள எல்லா அனுபவங்களும் இப்பிறவியில் நம் ஆழ்மனதில் பதிந்து உள்ளன.

வியாசரும் மேலும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் இறைவனைப்பற்றிய உண்மைக்குப் புறம்பான அபிப்பிராயம் ஏற்படாது என்பது இதனால் பொருள்படுகிறது.

இறைவனைப் பற்றி வியாசர் கூறியது பிழைதான் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு வியாசர் உணர்ந்த உண்மையான நிலையிலுள்ள இறைவனை உபாசிக்கவேண்டும்.

அவ்வாறு செய்து ஆன்மீக அறிவொளி பெற்றால் அல்லது தெய்வீக அறிவு மேலோங்கி இருக்கும்பொழுது எத்தனை பிறவியெடுத்தாலும் நாமும் ஞாபகசக்தியின் அறியப்படாத உள்ளார்ந்த ஆற்றலை அறியலாம். இதுதான் உண்மை. அனைத்தும் இறைசித்தத்துடன் இணைந்துள்ளபோது நாம் இறைவனைத்தான் அணுகவேண்டும். அவன் அனைத்தையும் அருளுவான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# செல்வ செழிப்பை விரும்புகிறீர்களா?

## பச்சை கற்பூரம் தரும் அதிசயம்

பச்சை கற்பூரத்திற்கு செல்வத்தை ஈர்க்கும் தன்மை அதிகளாவில் உண்டு. ஒரு மஞ்சள் துணியில் பச்சை கற்பூரத்தை முடிச்சாக கட்டி குபேர மூலையில் வைத்து தூபம் காண்பித்து வழிபட்டு வந்தாலே வீட்டில் பணம் எப்பொழுதும் இருந்து வரும். பச்சை கற்பூரம் இயல்பாகவே அதிக வாசனை நிறைந்தது. பச்சை கற்பூரத்தின் வாசனைக்கு பெரிய சக்தி இருக்கிறது. 2 அல்லது 4 துண்டு பச்சை கற்பூரத்தை பூஜை அறையில் வைத்து வழிபடுங்கள். இதனை பூஜை அறையில் வைப்பதால் வீட்டில் எப்போதும் நிம்மதி இருக்கும். நமக்கு நிம்மதி இல்லாமல் போக காரணமே வீட்டில் இருக்க கூடிய துர் சக்திகள் தான்.

பச்சை கற்பூரத்தின் வாசனையினாலும், அதன் மகிமையினாலும் வீட்டில் இருக்க கூடிய துர்சக்தியானது வீட்டை விட்டு வெளியே போய் விடும். அதனால் வீட்டில் எப்போதும் நிம்மதி இருக்கும். அதுமட்டுமல்லாது பச்சை கற்பூரத்திற்கு பணத்தினை ஈர்க்கும் தன்மை இருக்கிறதினால் வீட்டில் பணத்திற்கு கஷ்டம் இல்லாமல்வீட்டில் பணம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும்.

வீண் செலவுகள் இருக்காது. இந்த கற்பூரத்தினை பணம் இருக்கும் இடத்தில் வைக்கும் போது, அங்கு வரும் எதிர்மறையான வாசங்களையும், சக்திகளையும் இது தடுத்து நிறுத்தும். 2 பச்சை கற்பூரத் துண்டை ஒரு பேப்பரில் வைத்து மடித்து உங்களது பர்சில் வைத்திருந்தால் பர்சில் பணம் குறையாது எப்பொழுதும் இருக்கும். தொழில் விருத்தியடைய, செல்வம் பெருக பணம் புழங்கும் இடமான பணப்பெட்டி மற்றும் பீரோ போன்ற இடங்களில் இந்த பச்சை கற்பூரத்தை ஒரு டப்பாவில் போட்டு வைக்கலாம்.

வீட்டில் நடைபெறக்கூடிய எல்லா சுப நிகழ்ச்சிகளிலும் பச்சை கற்பூரத்தை இடம் பெற செய்வது நல்லது. பச்சை கற்பூரத்தை எடுத்து குலதெய்வத்தையும், இஷ்டதெய்வங்களையும் மனதார வணங்கி நமக்கு வேண்டியவற்றை நினைத்து பிரார்த்தனை செய்து அந்த பச்சை கற்பூரத்தை டப்பாவில் போட்டு வைத்துவிட வேண்டும். இப்படி செய்வதால் நம் வாழ்வில் நல்லதொரு மாற்றம் ஏற்படும். நம் வீட்டில் உள்ள துர்சக்திகள், கெட்ட சக்திகள், கண்திருஷ்டி, எதிர்மறை ஆற்றல் அனைத்தும் விலகி செல்வ செழிப்பான வாழ்க்கை அமையும். வாசனை மிகுந்த இடங்களில் மகாலட்சுமி குடிகொள்வாள். ஆதலால் பணம் புழங்கும் இடங்களில் வாசனை மிக்க பச்சை கற்பூரமானது இருந்தால் செல்வம் செழிக்கும்.




www.aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**



**தொடர்பு கொள்ள வேண்டிய எண்:**

**9444228203**

aanmeegamalar

# உண்மை வடிவம், சிலுவைக்கோலம், விதவைக்கோலம்

# மூன்றுமுறை உருமாறிய திருவள்ளுவர்



1935–ல் பயன்படுத்தப்பட்ட திருவள்ளுவர் படம்

www.aanmeegamalar.com


தீ வைத்து கொளுத்தப்பட்ட இலங்கை யாழ்பாண நூலகத்திலிருந்து கிடைத்த படம்!

திருவள்ளுவர் சர்ச்சை தமிழகத்தில் தற்போது மெல்ல தலை தூக்க ஆரம்பித்துள்ளது. தற்போது காவி திருவள்ளுவரா? விதவை கோலத்தில் வெள்ளை நிற திருவள்ளுவரா? என்ற வாதம் நடந்து கொண்டிருக்கிறது.

உண்மையில் இந்து மதம் என்ற வார்த்தை சில நூற்றாண்டுகளுக்கு முன் உருவாகி இருந்தாலும், இந்து மதம் மட்டுமே ஆதியில் தோன்றிய மதமாகும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் பிராய்லர் கோழி என்ற ஒன்று வந்த பின்தான் நாட்டுகோழி என்ற பெயர் பிரபலமானது, அதுவரை இந்தியாவில் கோழி என்றால் நாட்டு கோழி மட்டுமே.

1980களுக்குப் பின்பு இந்தியாவில் பிராய்லர் கோழிகளின் வரத்து அதிகரித்ததால், இரண்டு கோழி வகைகளையும் பிரித்து காட்ட நாட்டு கோழி என்ற வார்த்தை இந்தியாவில் அதிகரித்தது, இதைப் போன்றுதான் இந்தியாவில் இந்து மதம் மட்டுமே இருந்த சமயத்தில் ஊடுருவிய பல்வேறு மதங்களில் இருந்து பிரித்து காட்ட உருவான சொல்தான் இந்து.

பெயர் இடையில் வந்தாலும் இந்துக் கடவுள்களின் வழிபாடு பல்லாயிரக்கணக்கான

வருடங்களுக்கு முந்தையது என்பதை மறுக்க முடியாது.

அதே போன்று பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் உருவான புராதன கதைகள், காப்பியங்கள், இதிகாசங்கள், பொன்மொழிகள் அனைத்தும் இந்து மதத்தின் மூலம் உருவானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் 2,000 வருடங்களுக்கு முன்பு உருவான வள்ளுவர், ஆன்மிகம், குடும்பம், வாழ்வியல்முறை, நாட்டை வழிநடத்தும் முறை போன்றவற்றை மிக எளிமையாக கூறிய கருத்துக்கள் இந்து மதத்திற்கு சொந்தமில்லை என்று கூறுவது எப்படி?

20-ம் நூற்றாண்டிற்கு முன்புவரை கழுத்தில் பட்டையும், நெற்றியில் திருநீறும் அணிந்த படித்தான் மக்கள் வலம் வந்துள்ளனர்.

அதிக பட்சமாக, முகலாய படைகளும், வெள்ளைக்காரனும், நாட்டிற்குள் புகுந்து கொள்ளை அடிப்பதற்கு முன்புவரை மக்கள் தங்கள் கலாச்சாரமாக நெற்றியில் பட்டை, திருமண், கழுத்தில் ருத்திராட்ச கொட்டை போன்றவை அணிந்திருந்தனர்.

அப்படியிருக்க 2000 வருடங்களுக்கு முன்பு திருக்குறளை எழுதிய வள்ளுவன், ஆன்மிக நெறிகளை போதித்த வள்ளுவன், எப்படி இந்து மத சின்னங்களை அணியாமல் இருந்திருப்பார்?

திருக்குறள் உலகப் பொதுமறை என்று அறிவிக்க வேண்டும் என்பதற்காக, வள்ளுவனை மாற்றினால் எப்படி? நமது முன்னோர்கள் பின்பற்றிய கலாச்சார பழக்க வழக்கங்களை சிதைப்பது சட்டப்படி குற்றமில்லையா?

இந்த விஷயத்தில் வெளிநாட்டுக்காரர்களிடம் நாம் அதிகம் கற்க வேண்டும், சவுதி அரேபியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு, இந்திய அரசியல்வாதிகள் பயணம் மேற்கொண்டால், அங்குள்ள அரசியல்வாதிகளை சந்திக்கும்போது, சவுதி அரேபியாவில் அவர்களின் கலாச்சரப்படி ஆடையை விருந்தினரும் அணிய வற்புறுத்துவார்கள், இஸ்ரேலில் அவர்கள் அணியும் ஒருவகை தொப்பியை, அணிய வற்புறுத்துவார்கள்.

வளர்ந்த நாடாக இருந்தாலும், அவர்கள் கலாச்சாரத்தை யாரிடமும் விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் இந்தியாவில்.....?

இந்தியாவில் மட்டுமே கலாச்சார சீரழிவு அதிகம். மற்றவர்களுக்காக நாம் எதையும் மாற்றிக் கொள்ளும் பழக்கம் இந்தியாவில் அதிகம்.

வெளிநாடுகளில் 200 வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட கட்டிடத்தை சின்னமாக போற்றி பாதுகாக்கும் சூழ்நிலையில் இந்தியாவில் 1000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடக் கலையை, பெரிதாக மதிக்கப்படுவதில்லை. சிதைக்கப்படுவதுண்டு.

இதைப்போன்றுதான் தற்போது வள்ளுவனையும், கலாச்சாரத்தையும், விட்டுக்கொடுக்க ஒருசிலர் வற்புறுத்துகின்றனர்.

## உலகமே ஏற்றுக் கொள்ளும் கருத்தை கூறிய வள்ளுவனின் கலாச்சாரத்தையும் ஆடையையும் மாற்றினால்தான் உலகம் ஏற்றுக் கொள்ளும் என்று யார் கூறியது.

நன்றாக கவிதை எழுதிய ஒருவன், பெண் கள் அணியும் ஆடையை அணிந்தால்தான், உலகம் அவரை கவிஞராக ஏற்றுக் கொள்ளும் என்று கூறி, பெண்கள் அணியும் உடையை அணிய வற்புறுத்துவதற்கு சட்டத்தில் இடமுண்டா?

இஸ்லாமியரை வழிநடத்தும் முகமது நபி, கிறிஸ்தவர்களை வழிநடத்தும் இயேசு நாதர் போன்ற மகான்கள், அவர்களின் நாடுகளில் எப்படி வழிபடுகிறார்களோ அதே வடிவத்தில்தான் இந்தியாவிலும் வழிபடுகின்றனர். இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும், அவர்களின் உருவத்திற்கு புதிய அடையாளங்களை வழங்கவில்லை.

அதேபோன்று இந்து மதத்தினருக்கு சொந்தமான வள்ளுவருக்கு மட்டும் ஏன் உருவத்தை மாற்ற வேண்டும்.

விவேகானந்தர் காவி உடை அணிந்து உலகையே வலம் வந்தார். இன்றும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் விவேகானந்தரின் உருவ படம் காவி நிறத்தில்தான் உள்ளது.

மற்ற மதத்தினரும் அவரின் கருத்துக்களில் உண்மை இருப்பதை ஏற்றுக் கொண்டாலும், அவரின் காவி உடையைப் பற்றி யாரும் கேள்வி கேட்பதில்லை.

இந்த விஷயத்தில் வள்ளுவரை மட்டும் குறிவைத்து 1935-களுக்கு முன்பு வரை கழுத்தில் பட்டை ருத்திராட்ச கொட்டை அணிந்த வள்ளுவரை மாற்றி பட்டையையும், கொட்டையையும் மறைத்து வரைந்தது ஏன்?

இப்படியே போனால்... இந்து மத கருத்துக்களை கூறிய அகத்தியர், திருநாவுக்கரசர்,




எல்லீசன் அவர்களால் 1810–ஆம் ஆண்டில் வெளியிடப்படவிருந்த நாணயத்தில் திருவள்ளுவர் தலையில் சிலுவை உள்ளது போன்று இருந்தது.

சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற தமிழர்களின் கருத்துக்கள் பொதுமறையான கருத்துக்கள் என்று கூறி, அவர்களின் உருவத்தையும் மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கல்ல.

**திருவள்ளுவர் பட்டையும், கொட்டையும்தான் திருக்குறளை உலக மறை என்று ஏற்றுக் கொள்ள தடையாக உள்ளதா?**

**இதுவரை திருவள்ளுவரை மூன்றுமுறை உருமாற்றி உள்ளனர். அதைப்பற்றி விரிவாக பார்ப்போம்...**

### சிலுவை திருவள்ளுவர்:

வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்ட சமயத்தில் அவர்களுக்குள் போட்டி பொறாமை இருந்தது. இந்தவகையில் தென்னிந்தியாவை பிரித்து தனிநாடாக்க வேண்டும் என்று முதன் முதலில் பிள்ளையார் சுழிபோட்டவர் எல்லீசன்.

இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த எல்லீசன் 1796–ஆம் ஆண்டு சென்னை கிழக்கிந்திய கம்பெனியில் எழுத்தராக சேர்ந்தார். பிறகு 1798–ஆம் ஆண்டு துணைக் கீழ்நிலைச் செயலாளராகவும் (UnderSecretary) 1801–ஆம் ஆண்டு துணைச் செயலாளராகவும் (Deputy Secretary) 1802–ஆம் ஆண்டு துணைச் செயலாளராகவும் படிப்படியாக உயர்ந்தவர். 1806 ஆண்டு மசூலிப்பட்டினத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1810–ஆம் ஆண்டில் சென்னை கலெக்டராக பதவி உயர்வு பெற்றார். சென்னையில் ஆட்சியாளாராக பதவி உயர்வு பெற்றார்.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைச் சிறப்பாக ஆளவேண்டுமானால் இங்குள்ள மக்கள் பேசும் மொழிகளை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கற்க வேண்டும் என்று எல்லீசன் நினைத்தார். எனவே, இவர் இராமச்சந்திரன் கவிராயர் என்பவரிடம் தமிழ் மொழியைக் கற்றார். தமிழில் கவிதை எழுதும் அளவிற்கு வல்லமை பெற்றிருந்தார். சமஸ்கிருத மொழியையும் இவர் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

சென்னையில் ஆட்சியாளராக இருந்தபோது நாணயம் அச்சிடும் சாலையின் தலைவராகவும் இருந்தார். திருக்குறளை படித்து அதிசயித்து போனார். அந்த சமயத்தில் திருக்குறளின் அருமை பலருக்கு தெரியாமல் இருந்தது. இதை பயன்படுத்தி, திருக்குறள் பொதுவான நூல் என்று அறிவிக்க பல்வேறு முயற்சிகளை எடுத்தார்.

எனவே, தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, திருவள்ளுவர் உருவம் பொறித்த நாணயம் வெளியிட வேண்டும் என்று அவர் விரும்பினார். எனவே, இரண்டு தங்க காசுகளில் திருவள்ளுவரின் உருவத்தை பதித்து, திருவள்ளுவரின் தலையில் சிலுவை உள்ளது போன்றும், மாற்றி வடிவமைத்து, இதுபோன்ற நாணயம் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று அனுமதிக்கேட்டு இங்கிலாந்து தேசத்திற்கு அனுப்பினார்.

ஆனால், இங்கிலாந்து அரசு, இந்தியாவில் உள்ள வளமை மீது மட்டுமே ஆர்வம் காட்டியதால்,




தேவையில்லாமல் மதம் சம்பந்தப்பட்ட விஷயங் களில் கை வைக்க முன்வராததால், இவரின் கோரிக்கை கிடப்பில் போடப்பட்டது. உருமாற்றிய திருவள்ளுவருக்கு இங்கிலாந்து தேசம் அனுமதி அளிக்கும் என்ற நம்பிக்கையில் அறத்துப்பாலில் உள்ள 10 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்திருக்கிறார். மேலும் 13 அதிகாரங் களை அவருடைய அச்சகத்தின் மூலம் வெளியிட்டு விட்டார்.

ஆனால் உருமாற்றிய திருவள்ளுவருக்கு இங்கிலாந்து அனுமதி அளிக்காததாலும், திரு வள்ளுவரை உருமாற்றியதிலிருந்து, எல்லீசன் மிகுந்த மனவேதனையில் இருந்ததாகவும், கூறப்பட்டது. கி.பி.1819–ல் இராமநாத புரம், இராமலிங்க விலாசம் அரண்மனைப் பகுதியில் இருந்தபோது திடீரென விஷம் அருந்தி இறந்தார்.

இவர் உருவாக்கிய உருமாற்றிய நாணயம் பல ஆண்டுகளாக கிடப்பில் இருந்ததால் இந்த நாணயத்தைப் பற்றி யாருக்கும் தெரியாமல் இருந்தது, காலப்போக்கில் இந்த நாணயத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது.

வரலாற்று அறிஞர் ஐராவதம் மகாதேவன் 1994–ஆம் ஆண்டில் இந்த நாணயத்தை அடை யாளம் கண்டு அதைப் பற்றி வெளியுலகத்திற்கு தெரிவித்தார்.

எல்லீசன் 1819–ஆம் ஆண்டு இராமநாதபுரத் தில் இறந்தபோது, எழுதி வைத்திருந்து பிரசுரமாகாத நூல்களை ஜி.யு. போப் அவர்களுக்கு அனுப்பிவைத்தனர் என்று சொல்லப்படுகிறது. அவைகள் இன்றும் Bod leian Library at Oxfor–ல் உள்ளது என்று கூறுகிறார்கள்.

**திராவிட கொள்கை உருவாக்கியவர்...**

எல்லீசன்தான் முதன் முதலில் திராவிடக் கொள்கைளை உருவாக்கினார். தமிழ் தெலுங்கு கன்னடம், மலையாளம், துளு, குடகு, மால்டோ ஆகிய ஏழு மொழிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும், இதை திராவிட நாடு என்ற சித்தாந்தத்தை உருவாக்கி, இதை தென்னிந்திய மொழிக் குடும்பம் என்றும் பெயரிட்டார்.

1850–ல் தான் அயர்லாந்தைச் சார்ந்த இராபர்ட் கால்டுவெல் தன் திராவிட மொழி களின் ஒப்பிலக்கணம் என்கிற நூலில் தென் னிந்திய மொழிக் குடும்பத்திற்கு திராவிடமொழிக் குடும்பம் என்றுப் பெயரிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இவரின் மறைவிற்குப் பிறகு திராவிடமும் மறைந்து போனது, உருமாற்றிய திருவள்ளுவரும் மறைந்து போனார்.

பின் இந்தியா சுதந்திர போராட்டத்தை சந்தித்த சமயத்தில், தமிழகத்தில் உள்ள ஒருசிலரால் மீண்டும் திராவிடம் என்ற சொல் புதுப்பிக்கப் பட்டது, இதற்கு கேரளா, ஆந்திரா, கர்நாடக அரசுகள் செவி சாய்க்காததால் தமிழகத்தில் மட்டும் திராவிட நாடு கொள்கை பரப்பப்பட்டது.

## இரண்டவாது முறை உருமாறிய திருவள்ளுவர்:

ஓவியர் கே.ஆர்.வேணுகோபால் சர்மா! மைசூர் சமஸ்தானத்தில் பால விகடகவியாக தன் வாழ்க்கையை துவங்கியவர். பிரபல திரைப்பட இயக்குநரான பகவான் தாதாவிடம் சினிமா கலையினைக் கற்றுக்கொண்டார். சென்னையில் 'கிரீன் பிக்சர்ஸ்' என்ற திரைப்பட நிறுவனத்தைத் துவக்கி, நாத விஜயம், தெய்வீகம், மை சன் ஆகிய படங்களைத் தயாரித்து இயக்கினார். படங்கள் தோல்வியை தழுவியதால் சமஸ்தானத்தில் சம்பாதித்த பொருள் அனைத்தையும் இழந்தார்.

சென்னையில், மிச்சமிருந்த ஒரு சிறிய பங்களாவையும் விற்று தமிழக ஓவியக் கலைஞர்களின் திறமையை உலகுக்கு எடுத்து சொல்லும் முயற்சியில் ஓவியக் கலைக்கூடம் ஒன்றை 'பொன்னி ஆர்ட்ஸ்' என்ற பெயரில் சென்னை லாயட்ஸ் ரோட்டில் அமைத்தார். அதுவும் எடுபடாமல் தோற்றார்.

ஏன்? எதற்காக என்ற காரணம் இன்றி, திருவள்ளுவரின் பட்டையை நீக்கி ருத்ராட்ச கொட்டையை மறைத்து விதவை கோலத்தில் ஒரு உருவத்தை வரைந்து முடித்தார்.

அந்த சமயத்தில் தமிழகத்தில் இந்து மத எதிர்ப்பாளர்களின் அலை அதிகம் இருந்தது, இந்து தெய்வங்கள் நிந்தனையும், இந்து கடவுள் களின் சிலை உடைப்பு சம்பவங்களும் அதிகம்

அரங்கேறியிருந்த சமயத்தில், வேணுகோல சர்மா வரைந்த ஓவியத்தை திருவள்ளுவர் என்று கூறி தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்.

அந்த கால கட்டத்தில் இவர் வரைந்த ஓவியம் மட்டுமே பட்டையும் கொட்டையும் இன்றி இருந்ததால், மத்திய அரசும் (1960) தமிழக அரசும் (1964) இவரது ஓவியத்தை வள்ளுவர் என்று அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டன.

முதன்முறையாக 1964 ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் இவர் வரைந்த திருவள்ளுவரின் உருவத்தை அன்றைய துணைக் குடியரசுத் தலைவரான சாகிர் உசேன் திறந்து வைத்தார். 1967 ஆம் ஆண்டு தமிழக முதல்வரான அண்ணாதுரை இவருக்கு "ஓவியப் பெருந்தகை" என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்.

இவர் வரைந்தளித்த திருவள்ளுவர் திருவுருவத்தை, பள்ளி கல்லூரிகள், பேருந்துகள் போலீஸ் நிலையங்கள் நீதிமன்றங்கள் என தமிழக அரசாங்கத்துக்குரிய அனைத்துக் கோட்டங்களிலும் நிறுவச் செய்து அரசாணை பிறப்பித்தார். அரசாணை எண்: GO.MS 1193.

இப்படித்தான் திருவள்ளுவர் இரண்டு முறை உருமாற்றம் அடைந்தார். ஆனால் முதன் முதலில் தமிழகத்தில் வழக்கத்தில் இருந்த வள்ளுவர் மறைக்கப்பட்ட வரலாறு இதுதான்.

இந்து மதத்தில் மறைக்கப்படும், அழிக்கப்படும் கலாச்சாரத்தை பற்றி குரல் கொடுத்தால் சங்கி என்ற புது பெயரைச் சூட்டிவிடுகின்றனர். அப்படியில்லையென்றால் மதவெறியன் என்ற பட்டத்தை கொடுத்துவிடுகின்றனர்.

வளர்ந்த நாடுகளில் கூட, தங்கள் கடவுள் களையும், தங்கள் கொள்கைகளையும் யாரும் கிண்டலோ கேலியோ செய்வதில்லை. அவ்வாறு செய்தால் அவர்களை நாடுகடத்திவிடுவார்கள், அல்லது மரண தண்டனை கூட கொடுத்து விடுவார்கள்.

உண்மையில் இந்து மதத்தில் உள்ளவர்கள் மட்டுமே உலக அளவில் மதச்சார்பற்றவர்களாக உள்ளனர். இந்து மதத்தை யார் எது சொன்னாலும் கண்டுக்கொள்ளாமல் பசுவைப்போன்று சாது வாக இருந்துவிடுவார்கள். இந்து மதத்திற்கு நேரும் அவலங்களை தட்டிக்கேட்டால் மதவெறி யன் என்று கூறுவதால் ஒருசிலர் நடுநிலையாக இருந்துவிடுகின்றனர்.

எப்படி வெள்ளைக்காரன் மெல்ல இந்தியாவை ஆக்கிரமித்தானோ அதுபோன்று ஒருநாள் இந்து மதத்தை மற்ற மதங்கள் ஆண்டாலும் ஆச்சரியப்படுவதற்கல்ல....

– கீதாராஜன், சென்னை.
போன்: 9444228203

# வீட்டில் மந்திர ஆற்றல் கிடைக்க வேண்டுமா?

வீட்டு பூஜை அறையில் சின்னதா அம்மன் அல்லது முருகன் ஐம்பொன் சிலை வைத்து தினமும் அதற்கு பால் ஊற்றி கழுவி விட்டு சந்தனம் குங்குமம் பொட்டு வைத்து, ஊதுபத்தி பற்ற வைத்து, நெய் தீபம் ஏற்றி வைக்கவும். கந்த சஷ்டி கவசம், அம்மன் 108 போற்றி, காயத்ரி மந்திரங்கள் உச்சரிக்கவும். ஏதேனும் மலர்கள் ஒவ்வொரு மந்திரம் சொல்லும்போது அப்பூவை எடுத்து சிலை மீது போட்டு வணங்குங்கள்..

உங்கள் வீடு அருள் கட்சாட்சத்துடன் விளங்கும்.. .இதன் பின்னால் நிறைய சூட்சுமம் இருக்கு... ஐம்பொன் சிலையில் ஐந்து விதமான உலோகங்கள் இருக்கு. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம்.. இவை அதிக காந்த ஆற்றல் ஈர்ப்பு சக்தி உடையது.. நீங்க பால் அபிசேகம் செய்யும்போது அதன் நற்குணங்களை ஈர்த்துக்கொள்கிறது..இது சுக்ர அம்சம்...செம்பு செவ்வாய் அம்சம்... இரும்பு சனி அம்சம்...தங்கம் குரு அம்சம் வெள்ளி சுக்கிர அம்சம்.நீங்க மந்திரம் சொல்லி பூ போடும்போது பூவில் இருக்கும் நற்குணங்களையும் மந்திர சக்தியையும் சிலை ஈர்த்துக்கொள்கிறது.

பிறகு அவை சிலை மூலம் வீடு முழுக்க ஒரே சீராக பரவுகிறது இப்போது உங்க வீடு அதிக மந்திர ஆற்றலை எதிரொலிக்கும் வீடாக மாறுகிறது..காற்று மாசில்லாமல் கிருமிகள் அழிக்கப்பட்டு, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள காற்று நிரம்பிய இடமாக அந்த வீடு மாறுகிறது....

# ராசி பலன்கள்



**16.06.2021 முதல் 30.06.2021 வரை**

**ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்**
DME.,BA.,MA.,(ASTROLOGY)
**மயிலாடுதுறை**
CELL 9487215736

### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு

வேலையில் மாற்றம் எற்படும் குடும்பதில் மகிழ்ச்சிகள் நிலவும் பணவரவு அதிகரிக்கும் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும் எதிர்பாராத பணம் வந்து சேரும் ஆன்மீக பயணம் செல்வதற்கான வாய்புகள் ஏற்படும். மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோக உயர்வு உண்டு, ஆரோக்கியம் மேம்படும். புதிய முயர்ச்சிகளில் அதிக கவனம் தேவை. புதிய வீடு வாகன விஷயங்களில் கவனமாக செயல்படவும். ஆரோக்கியதில்அதிக கவனம் தேவை. நிலுவைவுள்ளவழக்குகள் முடிவுக்கு வரும். நீண்ட நாட்களாக வரவேண்டிய பணம் வந்து சேரும். பணவரவு சீராக இருக்கும்.

### ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் தொழிலில் சற்று பின்தங்கிய நிலை காணப்படும். நீங்கள் புதிய முயற்சிகளிள் ஈடுபடுவீர்கள், குழந்தைகள் மூலம் மகிழ்ச்சிகள் உண்டாகும், நோயிலிருந்து விடுபடுவீர்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். வேலையில் அடுத்த நிலைக்கு உயறுவீர்கள். உயர் அதிகரிகளால் பாராட்டுகள் குவியும் கௌரவம் தரக்கூடிய விஷயங்கள் நடக்கும், திருமணம் மூலம் மகிழ்சிகள் உண்டாகும் திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமண பேச்சுகளால் மகிழ்சிகள் உண்டாகும் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் அதிகரிக்கும். எதிர்பார்த பண உதவிகள் வந்து சேரும்.

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் சற்று கடினமான காலமாக இருக்கும் தொழிலில் மாற்றங்கள் செய்ய வேண்டாம். பிரிந்து இருந்த குடும்பம் ஒன்று சேரும். பொருளாதார சிக்கல்கள் ஏற்படும். கொடுக்கள் வாங்களில் கவனம் தேவை திருமண முயற்சிகளில் தொய்வு ஏற்படும் மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது குலதெய்வ வழிபாடு நன்மையை தரும். அரசாங்க ஆதரவு கிடைக்கும். தாயாரின் உடல்நலனில் அதிக அக்கறை தேவை. வீண் விரயங்களை தவிர்ப்பது நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும்.

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

கடன்பிரச்சனைகள் தீரும் படிப்பில் பின்தங்கிய நிலை காணப்படும் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை திருமணம் கைகூடும் தந்தை வழி சொத்துக்களால் பிரச்சனைகள் ஏற்படும். கூட்டுதொழிலில் கவனம் தேவை தோழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும் ஒருவிதமான பயம் இருந்து கொண்டே இருக்கும் மனைவியின் அன்பு ஆதரவாக இருக்கும் பணம் கடனாக யாருக்கும் தரவேண்டாம் குழந்தைகள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவிஷயங்களில் அதிக கவனம் தேவை. தொழிலில் எதிர்பார்த லாபம் கிடைப்பதில் சிரமம் ஏற்படும்.

### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்துகொள்ளவும் மனைவியின் அன்பு அதிகரிக்கும் ஆன்மீக பயணங்களை மேற்கொள்வீர்கள் அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக செயல்படுவது நன்மையை தரும் பொருளாதார வளர்ச்சி நன்றாகவே இருக்கும் வேலையில் உள்ள பிரச்சனைகள் தீரும் பெரியோர்களின் ஆலோசனைபடி செயல்படுவது நல்லது மானவர்களுக்கு படிபில் மந்தநிலை காணப்படும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி உண்டாகும்.தாயாரின் உடல்நலனில் அக்கறை தேவை.

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிபீர்கள் உடல்நலனில் கவனம் தேவை வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து

சேரும் தொழிலில் புது புது சிந்தனைகள் மூலம் வெற்றிகள் உண்டாகும் செலவுகள் குறையும் மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டு குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து சேறும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாக இருக்கும் சிலருக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். பங்குவர்த்தகம் மூலம் லாபம் ஈட்டலாம்.

### துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் பொருளாதாரம் சிறப்பாகஇருக்கும் அரசாங்க ஆதரவு அதிகரிக்கும் இது மகிழ்ச்சி காரமான மாதமாக இருக்கும் உங்களுடைய எண்ணங்கள் அனைத்தும் வெற்றிபெறும் இடமாற்றங்கள் உண்டு திருமணம் கைகூடும் குழந்தைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் பெண் தெய்வவழிபாடுசிறப்பைதரும்தொழில்போட்டிகள் அதிகரிக்கும் மாணவர்கள் போட்டிதேர்வில் வெற்றி பெறுவீர்கள் பயணங்களில் கவனம் தேவை திருமண பேச்சுவார்தைகள் மகிழ்சியை தரும். மனைவியின் உடல் நலனில் அதிக அக் கறை தேவை. தேவையற்ற வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.

### விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

மனைவி மூலம் மனகஷ்டங்கள் உண்டா கும். ஊழைப்புகேற்ற ஊதியம் வந்து சேரும் குடும்பதில் பிரச்சனை நிலவும் மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும் வேலை தேடு பவர்களுக்கு வேலை கிடைக்கும் ஒருவித பயம் எப்போதும் இருக்கும் கொடுக்கல் வாங் களில் கவனம் தேவை பணவரவு சீராக இருக்கும் கௌரவம்அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேரும் நீண்ட நாட்களாக விற்பனையாகாத இடம் விற்பனையாகும் கொடுக்கவேண்டிய கடன்களை கொடுத்து முடிபீர்கள் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும். உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவீர்கள்.

### தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாத தொடக்கதில் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். குடும்பதில் சுப நிகழ்சிகள் நடைபெறும் குழந்தைகளால் மகிழ் சிகள் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது திருமணவயதில் உள்ளவர்களுக்கு திருமணம்கைகூடும். தொழி லில் போட்ட திட்டங்கள் வெற்றியை தேடிதரும் தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும் வீடு வாகன சேர்க்கை ஏற்படும் தந்தை வழி உறவுகளால் வர வேண்டிய சொத்துக்கள் வந்து சேரும். ஆரோக்கியம் மேம்படும் வேலையில் சாதகமான சூழ்நிலை ஏற்படும் வீண் வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.

### மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் தொழில் சுமாராக இருக்கும்.புதிய திட்டங்களை செயல்படுதுவதற்க்கு முன்பு பல முறை யோசித்து செயல்படவும். குடும்பதில் ஒற்றுமை அதிகரிக்கும் செலவுகள் அதிகரிக்கும் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும் உயர் அதிகாரிகளால் நன்மை ஏற்படும். சக ஊழியர் களிடம் பேசும்பொது கவனமாக பேசவும் திடீர் பண வரவுகள் ஏற்படும் கடன்பிரச்சனைகள் முடிவுக்குவரும் நீண்டநாட்களாக வர வேண்டிய பணம் வந்து சேரும்.வேலை மாற்றங்கள் உண்டாகும். சேமிப்பு அதிகரிக்கும்.பொருள் சேர்க்கை உண்டாகும்.

### கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு

நீண்ட நாட்களாக திருமானமாகாதவர்களுக்கு திருமணம்கைகூடும் சுப விரயங்கள் ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் கல்வியில் நல்ல முன் னேற்றம் காணப்படும் குடும்ப உறவுகளில் விட்டுக்கொடுத்து போவது நன்மையை தரும்புதிய முயற்சிகளில் கவனம் தேவை தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டபடுவீர்கள் வசதிகள் அதிகரிக்கும் தான தருமங்கள் செய்வீர்கள். பூர்வீக சொத்துக்கள் சேரும்.மனைவி மூலம் ஆதாயம் உண்டாகும். தொழிலில் அதிக கவனம் தேவை. வெளிநாடு வேலை வாய்புகள் உண்டாகும்

### மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

சொந்த தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் முக்கிய முடிவுகளில் கவனம் தேவை திருமணம் கைகூடும் பணவரவில் தடை ஏற் படும். நிதானமாக செயல்படுவது நல்லது வெளிநாட்டு தொடர்பான விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும். ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான வேலையில் உள்ளவர்களுக்கு லாபம் அதிகாரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவணக்குறைவு ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் வீண் செலவுகள் அதிகரிக்கும் எதிரிகளால் பிரச்சனைகள் எயற்படுவதற்க்கு வாய்ப்பு உள்ளது வெளிநாட்டு வேலை கிடைக்கும் குடும்பதில் ஒற்றுமை நிலவும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்



# ஆணவம் + ஆசையின் கூட்டுக் கலவையே மனிதன்

நாற்காலியில் அமர்ந்திருப்பவனுக்கு நாற்காலி இருப்பது தெரியும். இதுபோல் பூஜை செய்து கொண்டே வா. பூஜையில் உனக்கு “கடவுளே” தெரிவார்.

❖❖❖

நல்ல வாழ்க்கைக்காக.. கடவுளை எண்ணி ஜெபமாலையை உருட்டுபவன் கோழை.

❖❖❖

உள்ளன்போடு பக்தி செய்யாவிடில்.. பக்தியில் ஏழை ஆவாய்.

❖❖❖

தமிழ்ப் புத்தாண்டு என்ற வருஷப் பிறப்பில் வருஷம் எப்படிப் பிறந்தால் உனக்கென்ன? உன்னிடத்தில் இன்று புதிதாய் என்ன பிறந்தது என்று யோசி. வருஷமென்ன?.. யுகமே புரியும்!!

❖❖❖

பக்தியுடன் கடவுளின் அருளைப் பெற்றால் தேனை அடையிலிருந்து பிழிந்து எடுத்ததைப் போன்று இருக்கும்.

❖❖❖

பக்தி இல்லாமல் துன்பம் நீங்க, கடவுளைக் கும்பிட்டு விட்டுச் சென்றால் மரத்தில் தொங்கும் தேன் கூட்டில் கைவிட்டதைப் போன்றிருக்கும்.

❖❖❖

ஆண்டவனுக்குச் சக்தி உண்டா? அருள் உண்டா? அது உனக்கு எப்படித் தெரியும்? கும்பிடும்பொழுது உன் மனம் உன்னிடம் இல்லாமலிருந்தால் உனக்கு என்ன புரியும்? ஒன்றுமே புரியாது.

❖❖❖

மனம் ஒரு மலர். அது வாடவே வாடாது. அது வாடாமல் இருக்க ஆண்டவனை நினை.

❖❖❖

சிந்தனையை முடித்துவிடு. பிறகு கொள்கையை வகுத்து விடு. சுகமாக இருக்கும்.

❖❖❖

கொள்கையை வகுத்தபின் சிந்திக்காதே. குழப்பமாகவே இருக்கும்.

❖❖❖

உலகமே! நீ தாயை மட்டுமே “அம்மா” என்று அழைப்பாய். இது போன்று உறவு சொல்லி அழைக்க பக்தி செய். இறைவனையும் அழைக்கலாம்.

❖❖❖

உனது மனம் சீட்டுக்கட்டு ஜோக்கரைப் போன்ற(தே)து. அதை பக்தி செய்யும்போது பயன்படுத்து. கடவுள் உன்னுடன் விளையாடுவான்.

❖❖❖

சிந்தனை செய்யாமல் பழகிவிடாதே. கலைக்கப்பட்ட சீட்டுக்கட்டு சீட்டுகளைப் போல உனது மனம் உனக்குப் பயன்படாது.

❖❖❖



சிந்தனை என்ற அகத்திற்கு ஒரு இடம் உண்டு. கொடைக்கானலைப் போன்ற உனது புத்தியே அந்த வாசஸ்தலம் ஆகும்.

❖❖❖

உனது புத்தியைக் கொளுத்தலாம். உனது ஞானத்தைக் கொளுத்த கடவுளே வேண்டும்.

❖❖❖

சிந்தனை என்ற “பப்புள்கம்“ வாங்கித் தருகிறேன். சிந்திக்கிறாயா? நீங்கள் ஒன்றும் குழந்தை அல்ல; பெரியவர்களே, என்று வெட்கப்படுகிறீர்களா? அப்படியானால் நீங்களே சிந்தியுங்கள்.

❖❖❖

இரண்டு மனிதர்களின் புத்தி ஒன்றாகச் சேர்ந்தால்? சிந்தனையும் நடக்கும். சில்லரை வேலைகளும் நடக்கும்.

❖❖❖

ஆணவம் + ஆசை.. இவைகளின் கூட்டுக் கலவையே மனிதன்.

❖❖❖

இம் மனிதன் மாற “குரு பக்தியே” தேவைப்படுகிறது.

❖❖❖

கிரைண்டரில் மாவு போட்டு அரைக்கலாம். இதுபோல புத்தியில் வெளி சிந்தனைகளைப் போட்டு அரைக்க முடியாது.

❖❖❖

சர்க்கரையில் எறும்பு விழுந்தால்..எறும்பிற்கு சர்க்கரையே அனுக்கிரகம். இதுபோல உலகம், பிறப்பு.. இவைகள் ஆண்டவன் நமக்கு வழங்கிய அனுக்கிரகமே.

❖❖❖

புத்தி என்பது செலவு... அதை செலவழி! சிந்தனை என்பது ரொக்கம்... அதைச் சேர்த்துவிடு!!

❖❖❖

கோடையில் பெய்யும் மழைக்குக் “கோடை மழை” என்று பெயர். பூஜை செய்து கிடைக்கும் அருளுக்குப் “பிறவிப் பயன்” என்று பெயர்.

❖❖❖

சிந்தனை செய்ய புத்தியைத் தேடு. உடனே சிந்திக்க இயலும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன் நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**




# மனுவை எழுதி வைத்து வணங்கினால் வழக்கில் வெற்றியை கொடுக்கும் சிவன்

# பக்தைக்காக வழக்கறிஞராக மாறி வாதாடிய இறைவன்

திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள வழுவதூரில் சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு வைவழுவாதூர் என ஊர் பெயரையும் திருவக்னீஸ்வரமுடையார் என இறைவன் பெயரையும் குறிப்பிடுகின்றது.

சடையவர்ம சுந்தரபாண்டியனால் கி.பி.1260 ஆம் ஆண்டு 11 நந்தா விளக்கெரிக்க கோயில் கருவூலத்திலிருந்து பணம் அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது. 6 விளக்கெரிக்கதனியா ரிடமிருந்து தானங்கள் பெறப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரருக்கு வழு வதூர் கிராமம் உரிமையானது என மூன்று கல் நடுவில் தனியே கல்வெட்டுள்ளது.

திருக்கழுக்குன்றத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது வழுவதூர் கிராமம். திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல் லும் வழியில் அமைந்துள்ள ஆலயம் இது.

முன்னர் காலத்தில் வைவழுவாதூர் என அழைக்கப்பட்ட ஊர் பெயர் மருவி தற்போது வழுவதூர் என அழைக்கப்படுகின்றது. அதுபோல அங்கு அமைந்துள்ள சிவபெருமானுக்கு திருவக்னீஸ்வரர் என்கின்ற பெயர் மருவி ஸ்ரீஅக்னிபுரிஸ்வரர் என அழைக்கப்படுகின்றது. சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் உருவாக் கப்பட்ட கோயில் இது.

கருவரையில் ஸ்ரீஅக்னிபுரிஸ்வரர் சிலை








அமைந்துள்ளது. சிவன் கோயில்களில இருக்கும் துவார பாலகர்களின் பெயர் சண்டன். பிரசண்டன். கருவரையின் வாயிலில் சண்டன் பிரசண்டன் சிலைகள் காவல் தெய்வங்களாக உள்ளனர். துவார பாலகர்களின் சிலை இரண்டு விதங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும்.

ஒன்று சங்கு சக்கர கதாயுதத்துடன் ஆயத பாணிகளாக துவார பாலகர்கள் காட்சி தருவார்கள். இன்னொன்று ஆயுதங்கள் இன்றி நிராயுதபாணியாக தன்னுடைய ஆட்காட்டி விரலை உயர்த்தியபடி ஒரு துவாரபாலகர் நிற்பார். இறைவன் ஒருவனே என்பதுதான் இதன் தத்துவம். இன்னோரு துவார பாலகர் தன்னுடைய கையை விரித்தபடி இருப்பார். இறைவனை தவிர வேறுஏதும் இல்லை என்பது இதன் தத்துவம். இங்குள்ள துவார பாலகர்கள் சங்கு சக்ர ஆயுதங்களுடன் அமைந்துள்ளது.

கருவரையை நோக்கியவாறு சிவஞூரியன் மற்றும் சிவசந்திரன் சிலைகள் உள்ளது. கோயிலினை சுற்றி வருகையில் நால்வர் சிலைகள் உள்ளது. ஆலயத்தில் ஸ்ரீகல்யாண வினாயகர் கோயில் அமைந்துள்ளது. வினாயகரை அடுத்து ஸ்ரீவள்ளி தெய்வானையுடன் சுப்ரமணியர் சிலை தனிஆலயமாக அமைந்துள்ளது.


வேலன்

அதனை அடுத்து ஸ்ரீமகாலட்சுமி ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயங்களுக்கு பின்னர் தனியாக ஸ்ரீசங்கமேஸ்வரர் என்கின்ற சிவாலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயங்களை கடந்து வருகையில தனியாக ஸ்ரீசௌந்திரநாயகி அம்மாள் சன்னதி அமைந்துள்ளது. கருவரை வாயிலில் ஹரப்ரதா மற்றும் சுபத்ரா சிலைகள் உள்ளன. (சிவன் பெருமாள் கோயில்களில் துவார பாலகர்கள் என்றும் அம்மன்கோயில்களில் முகப்பில் இருப்பவர்கள் துவார பாலகிகள் என்றும் புராணங்களில் குறிப்புகள் உள்ளன. அம்மன் கோயிலில் உள்ள துவார பாலகிகள் பெயர் ஹரபத்ரா மற்றும் சுபத்ரா) ஸ்ரீசௌந்திர நாயகி அம்பாள் நின்ற கோலத்தில் நமக்கு காட்சியளிக்கின்றார்.

அவரை வணங்கி வலம் வருகையில் கடைசியாக ஸ்ரீகாசிகால பைரவர் சிலை உள்ளது. கோயிலின் அருகில் இரண்டு குளங்கள் அமைந்துள்ளது. குளக்கரையில் இருந்து பார்க்கையில் திருக்கழுக்குன்றம் ஸ்ரீவேத கிரீஸ்வரார் மலையை தரிசிக்கலாம்.

ஆலயசிறப்புகள்

இங்கு உள்ள சிவபெருமான் வழக்குகளை தீர்த்துவைப்பதால் நிண்ட நாட்களாக வழக்கு வாய்தா என கோர்ட் கையுமாக அலைப வர்கள் இங்குள்ள சிவபெருமானை வணங்கி தங்கள் குறைகளை எழுதி மனுவாக வைத்து வணங்கினால் விரைவில் வழக்கில் வெற்றி கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். அதுபோல

சொத்து பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையுள்ளவர்களுக்கும் இந்த ஈஸ்வரர் உதவி புரிகின்றார். (உங்கள் கோரிக்கை நியாயமானதாக இருந்தால் உங்கள் ஆசை நிறைவேறும். அடுத்தவர் சொத்துக்கு நீங்கள் ஆசைப்பட்டால் உங்கள் ஆசை நிறைவேறாது)

இங்குள்ள ஸ்ரீசௌந்திரநாயகி அம்மனை தீபமேற்றி வணங்கி வந்தால் திருமண வயது கடந்து திருமணமாகாமல் இருப்பவர்களுக்கும் விரைவில் திருமணம் நடைபெறுவதாக சொல்கின்றார்கள்.

தலவரலாறு:

ஒரு முறை திருக்கழுக்குன்றத்தில் வசித்த ஒரு பெண் சில வீடுகளில் வேலை பார்த்து வாழ்க்கை நடத்தி வந்தார். அவளது கணவன் அந்த ஊரைச் சேர்ந்த சிலரிடம் வட்டிக்கு கடன் வாங்கியிருந்தான். ஆனால் அந்தத் தொகையைக் காட்டிலும் நான்கு மடங்கு பணம் கொடுத்த பின்னரும் கூட வட்டி கொடுத்தவர்கள் அந்தப் பெண்ணின் கணவனை துன்புறுத்தி வந்தனர்.

இதனால் மனமுடைந்த அந்தப் பெண் அந்தப் பகுதியைச் சேர்ந்த வழக்காடு மன்றத்தில் புகார் அளித்தாள். ஆனால் வழக்கை விசாரித்தவர்கள் பணம் இருந்தவர்களின் பக்கம் நின்றனர். இதனால் அந்தப் பெண்ணுக்கும் அவளது கணவனுக்கும் நீதி கிடைக்கவில்லை. திக்கற்று நிற்பவர்களுக்கு தெய்வத்தைத் தவிரவேறு என்ன துணை இருக்கிறது. அதனால் அந்தப் பெண் இங்குள்ள இறைவனை வந்து வழிபட்டாள்.

இறைவனிடம் தன்னுடைய நிலையை கூறி அழுது புலம்பினாள். அவள் இறைவனை சந்தித்து முறையிடுவது தினசரி வாடிக்கையாகிப் போனது. அவள் தொடர்ச்சியாக 5வது திங்கட் கிழமையாக வந்து வழிபட்டுக் கொண்டிருந்தாள்.

அன்றைய தினம் அந்தப் பெண்ணின் கனவில் தோன்றிய இறைவன் ‘கலங்காதே! நீ மீண்டும் அதே வழக்காடு மன்றத்தில் போய் புகார் கொடு. வெற்றி உன் பக்கம் வந்து சேரும். தைரியமாகப் போ’ என்று சொல்லி மறைந்தார்.

வழக்காடியஇறைவன்:

அதன்படியே அந்தப் பெண்ணும் மீண்டும் புகார் கொடுத்தாள்.




வழக்கை விசாரிப்பதற்காக அனை வரும் கூடியிருந்தனர். அப்போது இறைவன் வழக்காடுபவர் வடிவில் அந்த மன்றத்திற்குள் நுழைந்தார். அப்போது தவறு செய்தவர்களான வட்டி வசூலிப்பாளர்களால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. அவர்கள் அனல் மேல் நிற்பது போல் துடிதுடித்தனர். அங்கிருந்துஎழுந்து ஓட்டம் பிடித்தனர். இதையடுத்து இறைவன் அந்த மன்றத்தில் தன்னுடைய தரப்பு வாதத்தை வைத்து அந்தப் பெண்ணுக்கு நீதி வாங்கிக் கொடுத்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த ஊர் பெரியவர்கள் ‘உங்களை இதற்கு முன்பு நாங்கள் இங்கே பார்த்ததில்லையே.. நீங்கள் யார்? எங்கி ருந்து வருகிறீர்கள்?’ என்று கேட்டனர். அதற்கு இறைவன் ‘நான் யார் என்று தெரிய வேண்டும் என்றால் இங்கிருந்து ஐந்து கல் தொலைவில் உ ள் ள








ஆலயத்திற்கு வாருங்கள்' என்று கூறினார். ஊர் பெரியவர்களும் ஊர் மக்களும் புகார் கொடுத்த பெண் உள்ளிட்ட அனைவரும் வாதாட வந்தவருடன் சென்றனர். ஆலயம் வந்ததும் இறைவன் அக்னி பிழம்பாக மாறி நின்றார்.

இதையடுத்து வழக்காட வந்தவர்இறைவன் என்பதை உணர்ந்த அனைவரும் ஆச்சரியத் துடன்உள்ள மகிழ்வுடனும் இறைவனின் சன்னிதி முன்பாக விழுந்து வணங்கினர். ஆனாலும் அக்னி பிழம்பாய் நின்ற இறைவனின் வெப்பம் அனைவரையும் வாட்டியது. உடனடியாக அவற்றை தன் சக்தியால் இறைவன் குளிர்வித்தார். அக்னி பிழம்பாக இறைவன் நின்றதால் ‘அக்னிபுரீஸ்வரர்' என்று பெயர் பெற்றார்.

இந்த ஆலயத்திற்கு வந்து, இத்தல இறைவ னையும், இறைவியையும் வழிபட்டால் மனதளவில் உள்ள பிரச்சினைகளும், குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள் விலகும். மேலும் நீதிமன்ற வழக்குகளில் இருந்தும் விடுபடலாம்.

வெப்ப நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குண மடைய இத்தல இறைவன் அருள்புரிகிறார். இங்குள்ள இறைவனை 5 திங்கட்கிழமைகள் தொடர்ச்சியாக வழிபடுவதுடன், நெய் தீபம் ஏற்றி, வில்வ இலை அர்ச்சனை செய்தால் நற்பலன்கள் கிடைக்கப்பெறும். அம்பாளுக்கு பவுர்ணமியன்று மாலையில் தீபமிட்டு வழிபட்டால் மனம் போல் மண வாழ்க்கை அமையும்.

புதர்களின் நடுவே சிதிலமடைந்து இருந்த கோயிலினை ஊர் மக்கள் சேர்ந்து புனரமைத்து வழிபாட்டுக்கு உகந்ததாக மாற்றி உள்ளார்கள்.

அமைதியான சூழலில் மனதிற்கு ஆத்மதிருப்தியை ஆலயம் தருகின்றது. ஆலய தொடர்புக்கு. முருகேசன்: 9952432615 ரவி: 9360636805 அர்ச்சகர் வேதகிரி:994450 4002.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஒரு பிரதோஷத்தை பார்த்தால் ஆயிரம் பிரதோஷம் பார்த்த பலன்தரும் ஸ்தலம்

# ராமனின் மகன்களுக்காக குறுகி காட்சி தந்த சிவபெருமான்

தமிழகத்தில் உள்ள சிவாலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பினைப் பெற்று விளங்கும் வகையில் அமைந்துள்ளது, அதில் சென்னையின் மையப்பகுதியான கோயம்பேட்டில் அமைந்துள்ள குறுங்காலீஸ்வரர் சன்னதி மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இத்தலம் இராமாயணகாலத்துடன் தொடர்புடைய தலமாக விளங்குவ தாலும், காசி புண்ணிய க்ஷேத்திரம் இருக்கும் வட திசையை நோக்கி குறுங்காலீஸ்வரர் வீற்றிருப்பதால், இந்தத் தலம் காசிக்கு இணையான தலம் என்ற பெருமை உடையது.மேலும் இத்தலம் வட திசை நோக்கி அமையப்பெற்றதால் மோட்ச தலமாகவும் திகழ்கிறது.

மதுரையைப் போன்று இத்தலத்து அம்மனுக்கு அதித சிறப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

பித்ரு தோஷம் உள்ளவர்களுக்கு இத்தலம் ஒரு தோஷநிவர்த்தி தலமாகும். மேலும் திதி சம்பந்தப்பட்ட விஷயங்களை இத்தலத்தில் மேற் கொள்வது மிகுந்த பலனைத் தரும்.

இக்கோவிலுக்கு முன்னால் உள்ள திருக்குளத்தை யொட்டி பதினாறுகால் மண்டபம் உள்ளது. இதில் உள்ள ஒரு தூணில் சரபேஸ்வரர் திருவுருவம் பெற்று தனிப்பட்ட வழிபாடு நடைபெறுகிறது.

இதன் காரணமாக இத்திருக்கோவிலில் ஞாயிற்றுக் கிழமை ராகு கால வேளையான மாலை 4.30–6 வழிபடுவது விசேஷ பலனைத் தரும் என்பதாலும் சரபர்


www.aanmeegamalar.com






பைரவர் அம்சம் என்பதாலும் 11 நெய்தீபம் ஏற்றி சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

**தலச்சிறப்புகள்:**

சோழ மன்னன் ஒருவன், இவ்வழியே தேரில் சென்றபோது தேரின் சக்கரம் லிங்கம் மீது ஏறி, ரத்தம் வெளிப்பட்டது. அந்த இடத்து மண்ணை தோண்டிப்பார்த்தபோது பூமிக்கடியில் லிங்கம் இருந்ததைக் கண்டு மகிழ்ந்த மன்னன் இத்திருக்கோயில் எழுப்பினான்.

தேர்ச்சக்கரம் ஏறியதால் இந்த லிங்கத்தின் பாணம்பாதி புதைந்துவிட்டது. எனவே இங்கு சிவன் குறுகியவராக குள்ளமான வராக காட்சி தருகிறார். இதனால் சுவாமிக்கு "குறுங் காலீஸ்வரர்' என்ற பெயர் உண்டானது என்று கூறப்படுகிறது.

"குசலவம்' என்றால் "குள்ளம்' என்றும் பொருள் உண்டு. இதன் அடிப்படையில் இவர் குசலவபுரீஸ்வரர் என்று அழைக்கப்படுவதாகவும் சொல்வர். சுவாமியும், சுவாமியின் வலப்புறமுள்ள தர்மசம்வர்த்தினி அம்பிகையும் வடக்கு நோக்கி உள்ளனர். மதுரையில் மீனாட்சி வலப்புறம் இருக்கிறாள், அது போல், இத்தலத்திலும் அம்பாள் அதிக மகிமையுடன் உள்ளாள்.

இவள் இடது காலை முன்னோக்கி வைத்தபடி காட்சி தருவது மற்றொரு சிறப்பம்சம். தன்னை வேண்டும் பக்தர்களுக்கு விரைந்து வந்து அருள் செய்வதற்காக இவ்வாறு இருக்கிறாள்.

குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் ஒரு காலத் தில் வால்மீகி முனிவர் ஆசிரமமாக இருந்தது. சீதையின் புதல்வர்களான லவன் குசன் என்கிற இரு குழந்தைகளும் காட்டிலேயே வளர்ந்து அவர்கள் ஞானக்கல்வியும், வீரக் கல்வியும் கற்றனர். ஒருநாள் கம்பீரமாக குதிரை ஒன்றுடன் சில வீரர்கள் காட்டைக் கடக்க முயன்ற போது அவர்களை லவனும் குசனும் தடுத்து நிறுத்தினர்.

'இது அஸ்வமேத யாகத்திற்காக தன்னை வெற்றிகொள்ள யாருமில்லை என்பதை அறிவிக் கும்விதமாக ஸ்ரீராமர் அனுப்பி வைத்த குதிரை" என்றனர் வீரர்கள்.

அட அப்படியா? என்று ஆச்ச ரியப்பட்ட சகோ தரர்கள், அந்த வீரர்களுடன் போரிட்டு அவர்களை விரட்டி விட்டு, குதிரையைப் பிடித்து கட்டி வைத்தனர். குதிரையை மீட்க வந்தவர்களை லவ









குசர்கள் தோற்கடித்து விரட்டினர். அனுமான் வந்து விஸ்வரூபமாய் நின்றார்.

அவரை ராமநாமம் சொல்லி இயல்புக்கு வரவழைத்து தியானத்தில் மூழ்கடித்து வீழ்த்தி விட்டனர். கடைசியில் ராமரே வந்தார். வந்திருப்பது யார் என்பதை அறியாத லவ குசர்கள் அவரை எதிர்த்து உக்கிரமாய் போரிட்டனர். இச்சம்பவம் வால்மீகி முனிவருக்கு தெரியவந்தது.

பதறிய வால்மீகி முனிவர் ஓடோடி வந்து அவரி டையே புகுந்து சமாதானம் செய்து வைத்ததுடன் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்து வைத்தார். தந்தையை எதிர்த்து போரிட்ட காரணத்தால் லவ குசர்களை பித்ரு தோஷம் பிடித்துக் கொண்டது.

அந்த தோஷம் நீங்க வழி கூறுமாறு வால்மீகி யிடம் வேண்டினார் லவகுசர்கள்.

சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து பூஜை செய்து வழிபட்டால் உங்கள் தோஷம் நீங்கும் என்றார் முனிவர். அதன்படி தாங்கள் போரிட்ட அதே இடத்தில் ஒரு பலாமரத்தின் அடியில் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டனர்.

லிங்கம் பெரியதாக இருந்ததால் சிறுவர்களான லவகுசர்களால் நிமிர்ந்து நின்று பூசிப்பது சிரமமாக இருந்தது. லவகுசர்கள் எளிதாய் பூசிக்க ஏற்றவாறு தன் திருமேனியை குறுக்கிக் கொண்டு குறுங்காலீஸ்வரராய் காட்சி அளித்தார்.

ஈசனின் கருணையைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த லவகுசர்கள் தொடர்ந்து வழிபட்டு தோஷ நிவார்த்தி அடைந்தனர். முன்பு குசவ புரிஸ்வரர் என்று பின்பு குறுங்காலீஸ்வரர் என்றும் அழைக்கப்பட்டார். அவரை நினைத்து வழி பட பித்ருதோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

நவக்கிரக சன்னதியின் தரைப் பகுதி மஞ்சள், கீழ்பீடம் வெள்ளை, தாமரை பீடம் சிவப்பு, இரதம் கருப்பு, தெய்வங்கள் பச்சை என பஞ்ச நிறத்தில் இருப்பது வித்தியாசமான தரிசனம். இக்கோயில் வடக்கு நோக்கியிருப்பதால், மோட்ச தல மாக கருதப்படுகிறது.

பித்ருதோஷம் உள்ளவர்கள் குசலவ தீர்த்தத்தில் பரிகார பூஜைகளும், தர்ப்பணமும் செய்து கொள்கி றார்கள். பெற்றோருக்கு



நீண்டநாள் தர்ப்பணம் செய்யாதவர்கள், அவர்கள் மறைந்த திதி, நட்சத்திரம் தெரியாதவர்கள் இங்கு எந்தநாளிலும் தர்ப்பணம் செய்யலாம். கோபுரத்திற்கு கீழே கபால பைரவர், வீரபத்திரர் இருக்கின்றனர்.



ராஜாமணி

தெட்சிணாமூர்த்தி, சுவாமி சன்னதியின் பின்புறத்தில் லிங்கோத்பவரின் இடத்தில் இருக்கிறார். இத்தகைய அமைப்பை காண்பது அபூர்வம். கோயிலுக்கு முன் பெரிய 16 கால் மண்டபம் உள்ளது.

அதன் தூண்களில் ராமாயணக் காட்சிகள் விளக்கும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு தூணில் ஸ்ரீசரபேஸ்வரர் காணப்படுகிறார். ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் இவருக்கு பூஜை நடக்கிறது. இவர் அருகில் அணையா தீபம் இருக்கிறது.

சரபேஸ்வரர் வழிபாடு இங்கு மிகப் பிரபலம். ஞாயிறுதோறும் மாலை ராகுகால நேரங்களில் பெருந்திரளான மக்கள் கூடி சரபேஸ்வரர் வழிபாடு நடத்துகின்றனர். இத்தலத்தை 'ஆதி பிரதோஷத்தலம்" என்கிறார்கள்.

ஒரு பிரதோஷ தினத்தில் குறுங்காலீஸ்வரரைத் தரிசித்தால் ஆயிரம் பிரதோஷ தரிசனம் செய்த பலனும், ஒரு சனி பிரதோஷ தரிசனம் செய்தால் கோடி பிரதோஷ தரிசன பலனும் கிடைக்கும் என்பது ஐதீகம் என்கிறார்கள்.

கோயிலின் பிரதான அர்த்த மண்டபம் 40 தூண்களுடன்பிரமாண்டமாக அமைந்துள்ளது. இங்கு குசலவபுரிஸ்வரர் என்கிற குறுங்காலீஸ்வரர் சுவாமி சன்னதியும், அறம் வளர்த்த நாயகி என்கிற தர்மசம்வர்த்தினி அம்பாள் சன்னதியும் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன.

கோயில் நந்தவனத்தில் இரு வில்வ மரங்களுக்கு இடையே வேப்ப மரம் ஒன்று பிணைந்து இணைந்து நிற்கின்றது. பொதுவாக அரசமரமும் வேப்ப மரமும் இணைந்து காணப்படுவது இயல்பு ஆனால் இத்தலத்தில் சிவனுக்குரிய வில்வமரத்துடன், அம்மனுக்குரிய வேப்பமரம் இணைந்து காட்சி தருவது சிறப்பு. இக்காட்சி சிவசக்தி ஐக்கியத்தை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

இத்திருக்கோவில் காலை 5.30 மணி முதல் 12 மணி வரை, மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை திறந்திருக்கும். அலுவலக தொலைபேசி எண்: +9144 2479 6237. சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில் அமைந் துள்ளது.

– ராஜாமணி, சென்னை

தொடர்பு எண்: 94879 34050



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















# எந்த வெள்ளம் புரண்டுவருகிறதோ அந்த வெள்ளம் வழிகளை உண்டாக்குகிறது

- தராசுத் தட்டுக்கள் யாருக்காகவும் இறங்குவதும் இல்லை, ஏறுவதும் இல்லை.
- நல்லவனோ, கெட்டவனோ அதை நான் பார்ப்பதில்லை, என்னை நம்பி முழுமையாக சரண் அடைந்துவிட்டவர்களை நான் புறம் தள்ளுவது இல்லை. அவர்களுடைய அனைத்து விஷயங்களுக்கும் நான் பொறுப்பேற்கிறேன். அவர்களைக் காப்பதே என்னுடைய வேலை. அவர்களின் நன்மை தீமைக் கணக்கைப் பார்த்து காப்பாற்றும் தன்மையுள்ளவன் அல்ல நான். அதை வேறு ஒருவன் பார்த்துக்கொள்வான். அதற்கேற்ப பலன் தருவான். நான் தரும் நன்மைகள் அனைவருக்கும் பொதுவானவை. எனது தராசுத் தட்டுக்கள் யாருக்காகவும் இறங்குவதும் இல்லை, ஏறுவதும் இல்லை. அதேபோல, என்னை நாற்பது ஆண்டுகள் வணங்கியவனாக இருந்தாலும் சரி, நான்கு நாட்கள் மட்டும் வணங்கியவனாக இருந்தாலும் சரி, ஆத்மார்த்தமாக என்னை நோக்கிக் கூப்பிட்டால் உடனடியாக நான் பதில் கூறுகிறேன்.
- நான் என் பக்தனின் அருகிலேயே தாசனாக நின்றிருப்பேன். அவர்களின் பிரேமையே எனக்கு உணவு. அதற்காக நான் பசியுடன் தவித்துக் கொண்டிருக்கிறேன்.
- எல்லா விஷயங்களையும் ரகசியமாகவேச் செய்து தருவேன் யாருடைய கண்களில் கண்ணீர்த் துளிகள் கசிந்து உருகி ஓடுகின்றனவோ அவர்கள் ஆத்மார்த்தமாக வேண்டுகிறார்கள். மற்றவர்கள் அந்த அவசியத்தில் இல்லை என்பதால், மேம் போக்காக வேண்டுகிறார்கள். எந்த வெள்ளம் புரண்டுவருகிறதோ அந்த வெள்ளம் வழிகளை உண்டாக்குகிறது. எங்கே நீர் வரத்து இல்லையோ அங்கே வழிகள் உண்டாவதில்லை. இதுதான் கண்ணீருடன் வேண்டுகிற வேண்டுதலுக்கும், கடமைக் காக வேண்டுகிற வேண்டு தலுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.



www.aanmeegamalar.com

# எதிர்மறை எண்ணங்கள் வராமல் தடுப்பது எப்படி?

கீழேயுள்ள எண்ணங்கள் உங்களுக்கு ஏற்படுவதை கவனித்துள்ளீர்களா?

- என் மனதில் ஒரு சம்பவத்தை மறுபடியும் நினைத்துப் பார்க்கிறேன் (பெரும்பாலும் இனிமையற்ற விஷயங்களை).
- எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை திறமையாக கையாளுவதைப் பற்றி எந்நேரமும் நான் சிந்தித்துக் கொண்டிருப்பேன்.
- எனது மகிழ்ச்சிக்கு அங்கீகாரம் அல்லது ஒப்புதல் தேவை.
- நான் விரும்புவது போல் நடக்காவிட்டால்வருத்தப்பட்டு, மற்றவர்களை குறை கூறுகிறேன்
- குறிப்பிட்ட ஒரு வழியில் ஒருவர் செயல்படும் போது மட்டுமே நான் என்னைப் பற்றி நல்லதாக உணர்கிறேன்.
- எனக்கு எதிர்காலத்தைப் பற்றிய ஒரு கருத்து உள்ளது, நான் இவ்வாறு என்று என்னைப்பற்றிய ஒரு எண்ணச்சித்திரம் உள்ளது, மற்றும் நிகழ்வுகள் திட்டமிட்டபடி செல்லவில்லை என்றால், ஒவ்வொரு முறையும் நான் மனம் நொந்து போகிறேன்.

இந்த எண்ணங்களில் சிலவற்றை நாம் பல வகையான தீவிரத்தின் அளவுகளுடன் தொடர்புபடுத்த முடியும்.

பெரும்பாலும் இடைவிடாத எதிர்மறை எண்ணங்களானது, நம் மனதில் இருப்பதைவிட பலமடங்கு பெரிதாக பிரச்சனைகளை உருவாக்கி, நம் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் இழக்கச் செய்கிறது.

இத்தகைய எதிர்மறை எண்ணங்களுடன்போராடும் போது, மன உறுதியினைக் காட்டிலும் வேறு பயனுள்ள வழி இருக்கிறதா என்று நாம் யோசிக்கத் தொடங்குகிறோம். பல ஊக்கமளிக்கும் பேச்சாளர்கள் மற்றும் சுய உதவி வழிகாட்டிகள், நேர்மறையான சிந்தனையை தேர்வு செய்யலாம் எனக் கூறினாலும் அதை செயல்படுத்துவது அவ்வளவு எளிதன்று. தங்களை மாற்றிக் கொள்ளும் ஒரு நபரின் திறனை மையமாகக் கொண்டு (எண்ணங்கள்,உணர்வுகள் மற்றும் நடத்தைகள் சார்ந்தது), உளவியலாளர்கள் எதிர்மறை சிந்தனைக்கு சிகிச்சையளிக்கின்றனர்; இருப்பினும், ஒரு வரின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு பரந்த சிக்கல்களுக்கும் இது தீர்வு காணாது.


www.aanmeegamalar.com



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


### எதிர்மறை எண்ணங்களின் வரை விலக்கணம்

எதிர்மறை எண்ணங்களுக்கு பல்வேறு வரைவிலக்கணம் உள்ளது; பின்வருவது அத்தகைய ஒரு வரைவிலக்கணம்.

எதிர்மறை எண்ணங்கள் என்பது தன்னைப் பற்றி, பிறரைப் பற்றி அல்லது பொதுவாக உலகத்தைப் பற்றிய அறிவாற்றல் ஆகும். அவை எதிர்மறை உணர்வுகள், எதிர்பார்ப்புகள் மற்றும் பண்புக்கூறுகளால் வகைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் அவை மகிழ்ச்சியற்ற உணர்வுகள் மற்றும் பாதகமான நடத்தை, உடல் மற்றும் சுகாதார விளைவுகளுடன் தொடர்புடையவை ஆகும். எதிர்மறை சிந்தனை குறித்து ஓர் மகானின் கண்ணோட்டம் :

“எதிர்மறை எண்ணங்கள் மனதில் ஊடுருவி தீங்குவிளைவிக்கிறது. மனம் ஆரோக்கியமாக இல்லாவிட்டால் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல் லை. எதிர்மறை சிந்தனை வாழ்க்கையின் மகிழ்ச்சியை பறித்து விடும் என்றும் கூறலாம். இதுமனதை பலவீனப்படுத்தி, நம் மீதானநம்பிக் கையை இழக்கச் செய்கிறது. இதனால்ஒருவரின் வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகவும் நோக்கமற்ற தாகவும் மாறும்” ஸத்குரு (திருமதி) அஞ்ஜலி காட்கில்.

### எதிர்மறை சிந்தனையின் தாக்கம்

எதிர்மறை சிந்தனையால் பாதிக்கப்பட்ட ஒரு வர், பலவீனம் அடைவதுடன் அவரை சுற்றியுள்ள வர்களும் பாதிக்கப் படுகிறார்கள். எதிர்மறை சிந்தனையின் தாக்கங்கள் சிலவற்றை கீழே பட்டியலிடப்பட்டிருக்கின்றன:

- இது நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிக்கிறது.
- இந்த எதிர்மறை சிந்தனையானது நமதுஉறவு முறைகளை மிகவும் மோசமாக பாதிக்கிறது.
- ஒருவரது ஆன்ம சக்தியையும், நேர்மறையாக வளர வேண்டும் என்ற நமது தீர்மானத்தையும் தகர்த்து விடுகிறது.
- அதிகப்படியான எதிர்மறை எண்ணங்களால், கடினமான மன உளைச்சல் அல்லது மருத் துவ ரீதியான மனஅழுத்தம் மற்றும் ஒழுங்கு மீறிய நிலைக்கு வழிவகுக்கிறது. எதிர்மறை சிந்தனையின் நேரடி தாக்குதலால் மன நோய் கள் அதிகரிக்கிறது. இதனால் பல நாட்பட்ட நோய்களான இருதய நோய், நீரிழிவு, உடல் பருமன், ஆஸ் துமா, கால்கை வலிப்பு மற்றும் புற்றுநோய்க்கு வழிவகுக்கிறது.
- இது தினசரி செயல்பாட்டில் சிறிய இடை யூறுகளுக்கு வழிவகுக்கிறது. இதனுடைய தாக்கம் தீவிரமாக இருக்கும் போது தனிப்பட்ட, சமூக மற்றும் தொழில் ரீதியான குறைபாடுகளாக உருவெடுப்பதோடு, அகால மரணத்திற்கும் வழிவகுக்கிறது.

### எதிர்மறை எண்ணங்களின் மூல காரணங்கள்

ஆன்மீக ஆராய்ச்சியின் மூலம், 90% மனநோய்களின் அடிப்படைக் காரணங்கள், ஆன்மீக பரிமாணத்தை சார்ந்தது என்பதைக் கண்டறிந்துள்ளோம். உடல் மற்றும் உளவியல் காரணிகளால் ஏற்படும் மன நோய்களின் விகிதம் ஆன்மீக காரணிகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது. உடல் மற்றும் உளவியல் ரீதியாக எல்லாவிதமான உதவிகள் கிடைத்தாலும், ஒரு நேர்மறையான மனநிலையை வளர்க்க முடியாமல் போனதற்கு இதுவே துல்லியமான காரணம் ஆகும்.

எதிர்மறை எண்ணங்களின் உண்மையான காரணத்தை புரிந்துகொள்வதும், ஒப்புக்கொள் வதும் நிலையான நேர்மறை மாற்றத்தை அடைவதற்கான முதல் படியாகும்.

பின்வரும் துணை பிரிவுகளில் குறிப்பிடப் பட்டுள்ளபடி உடல், உளவியல் மற்றும் /அல்லது ஆன்மீக அடிப்படை காரணங்களால் எதிர்மறை எண்ணங்கள் ஏற்படலாம் என்று ஆன்மீக ஆராய்ச்சி காட்டுகிறது.

தீவிர எதிர்மறை எண்ணங்களின் அடிப்படை காரணங்களில், 50% ற்கும் மேலானவை ஆன் மீக ரீதியானது.

### எதிர்மறை சக்திகள்

- எதிர்மறை சக்திகள் வெளியில் இருந்து ஒரு

நபரை பாதிக்கலாம் அல்லது அந்த எதிர்மறை சக்தியால் ஒரு நபர் பீடிக்கப்பட்டிருக்கலாம். குறிப்பாக ஒரு நபர் ஆன்மீக ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் போது, அந்நபரின் உடல், மனம் மற்றும் புத்தியை எதிர்மறை சக்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

- அதிக ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகம் பாவம் உள்ளவர்கள், எதிர்மறை சக்திகளின் இலக்குக்கு மேலும் ஆளாகின்றனர். ஏனெனில் எதிர்மறை சக்திகள் தங்களை போன்று குறைபாடுகள் மற்றும் அகம்பாவம் கொண்ட நபர்களிடம் ஈர்க்கப்படுகின்றன.
- எதிர்மறை சக்திகள் ஒரு சிக்கலை பெரிதாக்கக்கூடும் எடுத்துக்காட்டாக, ஒருநபருக்கு கோப எண்ணங்கள் இருந்தால், எதிர்மறை சக்திகள் அவரை பீடிக்கலாம் அதாவது அந்த எண்ணத்தை பெரிதாக்குவதோடு, எண்ணற்ற அளவில் அந்த எண்ணத்திலேயே மனம் மீண்டும் மீண்டும் உழல்கிறது.

### உடல்ரீதியான தீர்வுகள்

மனதை ஆக்கபூர்வமாக செயல்படுத்த உடற்பயிற்சி, மருந்துகளை எடுத்துக்கொள்வது (தேவைக்கேற்ப), பிராணாயாம பயிற்சிகள், அமைதியான இசையைக் கேட்பது, திட்ட மிட்டு செயல்படுதல், ஆரோக்கியமான காலைக்கடன்களை முறையாக செய்தல் போன்ற தீர்வுகள்உதவுகின்றன. இருப்பினும், எதிர்மறை எண்ணங்கள் மனதுடன்தொடர்புடையவை என்பதால், உடல் ரீதியான தீர்வுகள் மூலம் முழுமையான தீர்வு கிடைப்பதற்கு பதிலாக கவனச்சிதறல் ஏற்படலாம்.

### மனோரீதியான தீர்வுகள்

உறுதிமொழிகள் எடுத்துக்கொள்வது,மன ஒருமைப்பாட்டு பயிற்சி செய்தல், மனநலமருத்துவரின் உதவியை நாடுதல் போன்றவை பிரபலமான உளவியல் தீர்வுகளின் வகைகளாகும். அறிவாற்றல் நடத்தை சிகிச்சை (Cognitive Behavioural Therapy) பரவலாக பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஒருவரின் எண்ணங்களின் நாட்குறிப்பைப் பராமரிப்பதும், பின்னர்எதிர் மறை எண்ணங்களை நேர்மறையான உறுதிமொழிகளுடன் மாற்றி அமைப்பதாகும். எனினும்,உறுதிமொழிகள் தங்கள் வரம்புகளையும் கொண்டிருக்கின்றன.

### ஆன்மீக ரீதியான தீர்வுகள்

ஆன்மீக ரீதியான அடிப்படை காரணங்களை கொண்ட எதிர்மறை எண்ணங்களை சமாளிப்பதற்கான சக்தி வாய்ந்த கருவிகள், ஆன்மீக பயிற்சி மற்றும் ஆன்மீக நிவாரணம் ஆகும். ஆன்மீக பயிற்சி நேர்மறையான ஆன்மீக சக்தியை உருவாக்கி, எதிர்மறை ஆற்றல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கி, தீங்கு விளைவிக்கிற பாதகமான விதியை நீக்குகிறது.




எதிர்மறை எண்ணங்களுடன் போராடுவது மிகவும் வருத்தமாகவும் அதையரிப்படுத்துவது போல் இருக்கும். ஆன்மீக அறிவியல் ஆராய்ச்சி அறக்கட்டளையானது (எஸ்.எஸ்.ஆர். எஃப்.) உங்களின் இக்கட்டான நிலைமையை புரிந்துகொள்வதோடு, நீங்கள் தனியாக இல்லை என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறோம்.

உலக மக்கள்தொகையில் கணிசமான பகுதியினர் தங்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் எதிர்மறை எண்ணங்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது எங்கள் அனுபவமாகும்.

பெரும்பாலான மக்கள் இப்பிரச்சனையை உடல் மற்றும் உளவியல் தீர்வுகளுடன் தீர்க்க முயற்சி செய்வதால் எதிர்மறை எண்ணங்களை சமாளிப்பது மிகவும் கடினமாகத் தோன்றுகிறது.

இருப்பினும், பிரச்சனை ஆன்மீக இயல்புடையதாக இருக்கும்போது, (பெரும்பாலும் அவ்வாறே), உடல் மற்றும் உளவியல் தீர்வுகளின் செயல்திறன் குறைவாகவே இருக்கும். நாங்கள் பரிந்துரைத்த ஆன்மீகக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், உங்கள் மனநிலை மற்றும் உங்கள் வாழ்க்கைத் தரத்தில் ஒரு திட்டவட்டமான முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

(பூஜ்ய) திரு. ஸந்தீப் ஆளஷி,
ஸனாதன் ஆச்ரமம், கோவா.
தொடர்பு: 09380949626

# ஆன்மீக வழியில் அமைதி

நம்மில் பெரும்பாலும் மோட்சத்தின் மீது நாட்டம் கொள்ளாமல், உலகில் காணும் போகப்பொருள்களின் மீது பற்றுகொண்டு, அதன் மூலம் வரக்கூடிய இன்பம், மகிழ்ச்சி மற்றும் சுகம் இருந்தால் மட்டும் போதும் என்று நினைத்துக் கொள்வார்கள். இத்தகைய இன்பம் மகிழ்ச்சியானது நிரந்தரமாக இல்லையென்று அறிந்தாலும் அதன் மீது பற்றுகொண்டு அந்த சுகமான வாழ்வில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். நித்தியம் அநித்தியமான பொருள்களை அடைவதன் மூலம் அவைகளால் வரக்கூடிய இன்பம், மகிழ்ச்சி, மற்றும் இன்பதுன்பங்களின் மீது பற்றில்லாமல் இருப்பதுதான் வைராக்கியம் என்று வேதங்கள் இதிகாசங்கள் ஆன்மீக வழியில் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

வைராக்கியம் என்றால் உலகத்தில் காணும் பொருள்களின் மூலம் வரக்கூடிய ஆனந்தம் இன்பம் மகிழ்ச்சியில் பற்றின்மையாக இருப்பதுதான் ஆகும். அவ்வாறு நாம் உலகப்பொருள்களின் மீது தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றற்று இருந்தால் நம் வாழ்வில் நாம் விரும்பும் அமைதியைப் பெறலாம். அதேபோல் இந்த உலகத்தில் உள்ள பொருள்களை அடைவதன் மூலம் அந்தப் பொருள்களினால் வரக்கூடிய இன்பத்தின் மீது மட்டுமல்லாமல், துன்பங்களின் மீதும் பற்றில்லாமல் இருக்க வேண்டும். நமக்கு வரக்கூடிய துன்பங்களை பற்றி எப்போதும் மனதில் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கும்போது நாம் தேடும் விரும்பும் மனஅமைதி என்பது கிடைக்காது.

எனவே நாம் நமது கர்மபலன்களினால் வரக்கூடிய துன்பங்களை கண்டு கலங்கி விடக்கூடாது. நாம் துன்பம் துயரங்களின் மீது கவனம் செலுத்துவதை தவிர்க்க வேண்டும். மனித வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் போன்று கவலையும் ஒரு அங்கம்தான் என்று எளிதாக கருதவேண்டும். அவ்வாறு துன்பம் துயரங்களைப் பற்றி நினைத்து நாம் வருந்திக்கொண்டிருக்காமல் இருக்கும்போது, அவைகள் நம்மை விட்டு நம்மை அறியாமல் நீங்கி விடும். அப்போது நாம் தேடும் மன அமைதி கிடைக்கும். அதற்கு நாம் ஆன்மீக வழியில் தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் சொர்க்கம் நரகம் மோட்சம் போன்ற மற்ற லோகங்களில் காணப்படும் பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பத்தில் துன்பத்தில் பற்றில்லாமல் இருப்பது பற்றி தெளிவாக வேதங்கள் இதிகாசங்கள் தெளிவாகக் கூறுகிறது.

இராமாயணத்தில் வரும் ஜனக மன்னன் மிதிலை நாட்டில் நல்லாட்சி புரிந்து வந்தார். அவரது நல்லாட்சியைக் கண்டு அந்நாட்டு மக்களிடமிருந்து ஜனகருக்கு புகழ் ஆனந்தம் இன்பம் போன்றவை கிடைத்தது. அவ்வாறு புகழ், பெருமை போன்றவை கிடைத்தாலும் அவற்றின்மீது அவர் பற்றின்மையாக இருந்தார். அதுபோல் ஜனகர் ஆட்சியில் துன்பம் தரக்கூடிய நிகழ்வுகளைக் கண்டு அவர் மனம் கலங்கி விடாமல்



அமைதியாக ஆட்சி புரிந்து வந்தார். அவர் தன் நாட்டு மக்கள் தன்னை மிகவும் புகழ்கிறார்கள் என்பதற்காக அவர் மகிழ்ச்சியில் மூழ்கவும் இல்லை. அதேபோன்று அவர் நாட்டில் தனக்கு ஏற்படும் துன்பம் தரக்கூடிய நிகழ்வுகளினால் மனக்கலக்கமடையவும் இல்லை. அவர் இன்பத்திலும் துன்பத்திலும் தாமரை இலைத்தண்ணீர் போன்று பற்றற்று ஜனகர் மிதிலையை அமைதியாக ஆட்சி புரிந்தார். அவர் ஒரு இல்லறஞானி போன்று திகழ்ந்தார் என்று இராமாயணம் என்னும் இதிகாசம் கூறுகிறது.

பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் ‘கடமைச் செய் பலனை எதிர்பாராதே’ என்று கூறியிருக்கிறார். ஆனால் நாம் எந்தவொரு கடமையைச் செய்யும்போது நமக்கு பலன் இல்லாமல் இருக்காது. எனவே நாம் கடமையைச் செய்யும்போது அதன்மூலம் நமக்கு தானாக வரக்கூடிய பலனை ஏற்றுக்கொள்ளாதே என்று பகவான் கூறவில்லை. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றுதான் கூறியிருக்கிறார். நாம் பலனை எதிர்பார்த்துச் செய்யும் கடமையில் செயல்பாடுகளில் மனதில் முழு ஈடுபாடு இருப்பதில்லை. உலகில் காணும் பொருள்களின் மீது பற்று வைத்துக் கொள்ளலாம், ஆனால் அந்தப் பற்று, மற்றும் நமது செயல்பாடுகளில் நாம் தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றற்று இருக்க வேண்டும். இதனைத்தான் பகவத்கீதையில் கிருஷ்ண



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பராமாத்மா ‘கடமைச் செய் பலனை எதிர்பாராதே’ என்று கூறியிருக்கிறார்.

நாம் ஞானிகள் சமாதி அடைந்த இடங்களுக்கு சென்று தியானம் செய்யும்போது மனதில் ஓரளவு அமைதி காணலாம். சமாதி என்றால் சமம்+ஆதி=சமாதி. சமாதி என்பது சமம் போன்ற பொருள்படும். சமாதியடைவது என்பது முடிவு பெறும் ஒரு நிலை என்று கூறுவதற்கு முடியாது. இறைவனால் நியமிக்கப்பட்ட காரியங்களை ஒரு காலவரவறைக்குள் ஆன்மீக வழியில் நடத்தி காட்டிய பிறகு மனஅமைதி அடைவதே முக்தி அடைவது ஆகும். ஆனால், அந்த ஞானியின் ஆற்றலும், அருளும் என்றும் இந்த உலகத்தில் நிலைத்திருக்கச் செய்துவிட்டு, இறைவனோடு ஞானியர்கள் இரண்டறக் கலந்து விடுகின்றனர். சமாதி நிலையில் இருப்பதும் யோகநெறியின் உச்சநிலை என்று திருமூலரால் உரைக்கப்படுகிறது.

“அந்தமில் ஞானிதன் ஆகம் தீயினில்
வெந்திடின் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரின் நுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே.
எண்ணிலா ஞானி உடலெரி தாவிடின்
அண்ணல் தன் கோவில் அழலிட்ட
தாங்கொக்கும்
மண்ணில் மழைவீழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பா ரரசே.”.

ஞானியின் உடலை முறையாக புதைக்காமல், கேட்பாரற்று நிலத்தின் மேல் அழிந்து போகும்படி விட்டுவிட்டால், அந்த நாட்டில் மழையின்றி பெரும் பஞ்சம் ஏற்படும். அரசனும் தன்னோட பதவியை இழந்து விடுவான் என்றும் நாட்டுமக்களும் அத்துடன் அழிவர் என்று திருமூலர் தம்முடைய பாடல்கள் மூலம் விளக்கிக் கூறுகிறார். எனவே ஞானியரின் உடலை சமாதிக்கிரியை என்னும் முறையான சடங்கின்படி அடக்கம் செய்வதே சிறந்தது என்கிறார் திருமூலர்.

ஞானிகள் சமாதியான இடங்களில் அவர்களுடைய ஆன்மீக அதிர்வலைகள் (vibration) சூழ்ந்திருக்கும். எனவே நாம் ஞானிகள் சமாதியான இடங்களுக்கு சென்று தரிசனம் செய்து வரலாம். நாம் துன்பம் துயரங்களில்



மனக்கஷ்டத்துடன் இருக்கும்போதும் ஞானிகள் சமாதியான இடங்களை தரிசனம் செய்து வரலாம். அவ்வாறு நாம் ஞானிகளின் சமாதிகளைத் தரிசனம் செய்வதன்மூலம் ஞானிகளின் அதிர்வலைகள் நம் மனதில் பரவி, நமது வாழ்வில், மனநிலையில் மாற்றம் பெற்று நாம் ஒருவிதமான மனஅமைதி பெறலாம்.

மோட்சத்தை அடைய வேண்டும் என்கின்ற விருப்பம் நம்மிடம் இருக்க வேண்டும். எந்த ஒரு செயலையும் விருப்பமுடன் செய்யும்போது, அது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும். நாம் ஒரு செயலை விருப்பமில்லாமல் செய்யும்போது அது நமக்கு வேதனையாகக்கூட இருக்கும். ஆன்மீகத்தில் நமக்கு முதலில் விருப்பம் இருப்பதோடு முயற்சியும் அதில் முழுமையான ஈடுபாடும் இருக்க வேண்டும். ஒருவர் நாள்தோறும் சிறிது தூரம் நடந்து செல்வதில் விருப்பம் இருந்தால் அவருக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதனால் அவருடைய உள்ளமும் உடலும் ஆரோக்கியமாகவும் இருக்கும். அவர் நடப்பதற்கு சோம்பல்பட்டால், நடந்து செல்லாமல் இருந்தால் ஆரோக்கியமான உடலை இழந்து தன்னோட மகிழ்ச்சி ஆனந்தத்தினை இழக்க நேரிடும் என்பதை அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

விவேகம், வைராக்கியம், சமாதி, மோட்சம் இந்த நான்கு பண்புகளும் நமக்கு சிறிதளவு இருந்தாலும், நாம் அவற்றை அடைவதற்கு ஆன்மீக வழியில் முயற்சி செய்யவேண்டும். அவற்றை அடைந்தபின் நான்கு பண்புகளையும், நாம் ஆன்மிகத்தின் மூலம் நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் வேதாந்தத்தில் கூறியுள்ளபடி அதில் முழுமையாக ஈடுபடவேண்டும். பொதுவாக அனைவரிடமும் விவேகம், வைராக்கியம், சமாதி மற்றும் மோட்சத்தில் விருப்பம் போன்ற நான்கு பண்புகளில் ஏதேனும் ஒன்று கொஞ் சமாவது நம்மிடம் இருக்கும். அவ்வாறு இந்த நான்கு பண்புகளில் ஒன்று சிறிதுகூட நம்மிடம் இல்லையெனில் ஆன்மீக நாட்டம் மற்றும் நாம் சாஸ்திரங்களில் வேதங்களில் கூறியுள்ளபடி ஆன்மீகத்தில் ஈடுபடவோ அதனை தொடரவோ முடியாது. அதாவது வைராக்கியம் விவேகம் போன்றவற்றில் சிறிதளவாவது நம்மிடம் இருக்கிறது. நம்மிடம் எவ்வளவுதான் பலஹீனங் கள் இருந்தாலும் இந்த நான்கு பண்புகளில் ஏதேனும் ஒன்று நம்மிடம் கொஞ்சமாவது இருக்கும்.

விவேகம், வைராக்கியம் சமாதி மோட்சம் இந்த நான்கு பண்புகளும் அனைவரிடமும் முழுமையாக இருக்காது. இருப்பினும் இவற்றில்

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

ஏதேனும் ஒன்று சிறிது இருந்தாலும் அதன் மூலம் இந்த நான்கு பண்புகளையும் வளர்த்து கொள்ள முடியும். அவ்வாறு நாம் ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம், ஆன்மீக அன்பர்கள், சாதுக்களை அணுகுவதன் மூலம், சத்சங்கத்தில் ஈடுபடுவதன் மூலம் நான்கு பண்புகளையும் நாம் வளர்த்துக்கொள்ள முடியும். இவற்றின் மூலம் நாம் ஞானத்தினை அடைந்து கொள்வதோடு நாம் தேடும் விரும்பும் மனஅமைதியினை ஆன்மீக வழியில் அடையலாம்.

நமக்குப் பசி வந்து விட்டால் அதனை நீக்க வேண்டும் என்றால் நாம் சாப்பிட வேண்டும். பசி எடுக்கும்போது சாப்பிட்டு விட்டால் உடனே பசியானது நீங்கி விடும். ஆனால் நமக்கு வேண்டிய சாப்பாட்டை நாம் சமையல் மூலம் தயார் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். நமக்கு சமையல் செய்வதற்கு ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். அதேபோன்றுதான் ஆன்மீகத்தினை அறிந்து அதனை செயல்படுவதற்கு விடாமுயற்சியுடன் ஆரம்பத்தில் கஷ்டப்பட வேண்டும். உணவைச் சாப்பிடுவதால் வயிறு நிறைவதோடு நமக்கு ஒருவிதமான இன்பம் அப்போது கிடைக்கிறது. அதேபோல் நாம் ஆன்மீகம் குறித்த கருத்துகளை மீண்டும் மீண்டும் கேட்க, உணர, உணர ஆன்மீக நூல்களை தொடர்ந்து படிக்கும்போது தெளிவு பெற்று மனஅமைதி கிடைக்கும்.

விவேகம், வைராக்கியம், சமாதி, மோட்சம் இந்த நான்கு பண்புகளும் ஒவ்வொரு மனிதனிடமும் கொஞ்சமாவது இருப்பதினால்தான் ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்பட்டு நம்மையும் அறியாமல் தியானம் பக்தி சத்சங்கம் போன்றவற்றில் ஈடுபடுகிறோம். அந்த நான்கு பண்புகளையும் நாம் வளர்த்துக் கொள்வதற்கு ஆன்மீக வழியில் முயற்சியில் ஈடுபடவேண்டும். ஆன்மீகத்தில் முழுமையாக ஈடுபடுவதன் மூலம் நாம் தேடும் மனஅமைதி நிரந்தரமாகப் பெறுவதற்கு முடியும். நான்கு பண்புகளின் குணங்கள் என்ன என்பது பற்றி விளக்கத்தினை சிந்தித்துப்பாருங்கள். அதற்கு விடை கிடைக்கும். முதலில் விவேகம் பற்றி அதன் குணம் என்ன என்பது பற்றி சிந்தனை செய்வோம். விவேகம் என்றல் என்ன? விவேகத்தை அடைதல் எப்படி? விவேகத்தின் பலன்கள் எவை? நித்தியம், அநித்தியம் என்றால் என்ன? இவற்றிற்கெல்லாம் ஆன்மீகம் ஏதோவொரு வழியில் விளக்கம் அளிக்கிறது. நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு விவேகம் என்னும் அறிவு நமக்கு ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

நித்தியம் என்றால் மூன்று காலங்களில் அழியாத பொருள் எது என்றால் அது அழியாத நம் கண்ணுக்குத்தெரியாத உணரக்கூடியது பரம்பொருள் அல்லது பிரம்மை ஆகும். அழியாமல் இருப்பது ஒன்று ஆத்மா பிரம்மை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். உலகில் எந்தெந்தப்பொருள்கள் அழியும் பொருள்களோ அவையெல்லாம் பரம்பொருளுக்கு வேறாக இருக்கின்ற செயல்படுகின்ற பொருள்கள் ஆகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த உலகத்தில் நமது வாழ்க்கையில் அழியாத பொருள்களைப் பார்த்திருப்போமா என்பதை சிந்தித்துப் பாருங்கள். அழியக்கூடியபொருள்கள் அனைத்தும் பரம்பொருளுக்கு வேறானது. அனைத்தும் அழியக்கூடியது நிலையற்றது ஆகும். இதனை நாம் தெளிவாக தெரிந்து கொள்ள உதவுகின்ற உன்னதக் கருவிதான் விவேகம் என்னும் அறிவு ஆகும்.

இந்த உலகத்தில் நாம் அழியாத எந்தப் பொருளையும் பார்க்க முடியாது. ஏன் எந்தக் கண்களால் ஒரு பொருளைப் பார்க்கிறமோ, அந்தக் கண்களே ஒரு காலத்தில் அழிந்து போகக்கூடியதுதான். நமது மனதில் அவ்வப்போது தோன்றும் நினைக்கக்கூடிய எண்ணங்களும் நாள்தோறும் அழியக்கூடியதுதான். அதேபோல் உலகில் எந்தப் பொருளும் மாறாமல் இருப்பதில்லை. ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு காலங்களில் அழிந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு பொருள் அழியும் காலம் வேண்டுமானால் மாறுபடலாம். ஆனால் அந்தப் பொருளும் ஒரு காலத்தில் அழிந்து விடும் என்பதை நாம் உணரவேண்டும். அப்படி அழியாத பொருள் ஒன்று உண்டு என்றால் அது பரம்பொருள் மட்டும்தான். அந்த பரம்பொருளை காணவேண்டும் என்றால் ஆன் மீக வழியில் செல்ல வேண்டும். அதுதான் அழியாத நமது கண்ணுக்குத்தெரியாத நம்மால் உணரக் கூடிய பரம்பொருள் ஆகும். அதன் மூலம் நாம் தேடும் விரும்பும் நிரந்தரமான மனஅமைதி கிடைக்கும்...

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


COVID-19
VACCINE
COVID-19
VACCINATION
GET VACCINATED NOW FOR YOUR SAFETY AND OTHERS